S-173

உ

பரமபதி துணை.

# அகத்தியர்

திருவாய்மலர்ந்தருளிய

# பூஜாவிதி 200.

## ஞான சைதன்யம் 51 சேர்ந்தது

கொந்தகைக் கிராமம், பாலதண்டாயுதபாணி ஆலயம்,

சமாதி நிஷ்டா சாதன

**சுந்தரராஜ சுவாமியவர்களால்**

பரிசோதிக்கப் பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

**குருசாமிக்கோனார் சன்**

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு,

**ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்,**

பதிப்பிக்கப் பெற்றது.

1938

முதல் பதிப்பு) காபிரைட் (விலை 0—12—0

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களி லொருவரான

அகத்தியர்

# பூஜாவிதி 200.

காப்பு.

ஆதார மாறு மகண்ட குருபாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கம்—நாதமுறும்
விந்துவே மூலம் விளங்கும் பூஜாவிதியாந்
தந்திமுகத் தோன்கருணை தான்.

காரணமாஞ் சிவயோகச் சித்தர்பூஜை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
பூரணமா மவுனமல்லோ ஞானவாழ்க்கை
புகழான அஷ்டாங்கம் நடனமாடும்
சீரணமாய்ப் போகாமற் பூஜைமார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க்கையா
வாரணமா முகத்தோனே முதலேபூஜை
மற்றதொரு பூஜையெல்லாம் பிறகுசெய்யே. (1)

செய்யப்பா அதன்பிறகு சுப்பிரமண்யன்
தீர்க்கமாய் அதன்பிறகு வயிரவன்றான்
செய்யப்பா அதன்பிறகு தெட்சணாமூர்த்தி
சித்திபெற்ற மூலகுரு சங்களாலே
செய்யப்பா அஷ்டகன்மம் வாலைவாலை
சிதம்பரத்தின் பதமாறி யாடுமூலஞ்
செய்யப்பா தாக்குநோக் காலேசிக்ஷை
சிறப்பாக மவுனத்திற் சித்தியாமே. (2)

ஆமப்பா சாலோக சாமீபத்தில்
அழுந்தாமற் சாரூப மறியுங்காலம்
காமப்பால் கானற்பால் ரெண்டுங்கொண்டால்
கைக்குள்ளாம் பூசையுமெய்க் கருவைச்சொன்னேன்
நாமப்பா யிப்படியே சித்தரெல்லாம்
நயமீறும் பூசைசெய்வார் நன்பினாலுந்
தாமப்பா நியாசத்தால் முத்திரைகளாலுஞ்
சக்கரத்தின் பூசைவிதி சாற்றுவேனே. (3)

சாற்றுவேன் யாகசா லேக்குள்ளாகச்
சாயங்கள் நிவர்த்திசெய்து சத்திபூசை
தேற்றுவேன் சிவபூசை வாலைபூசை
சிதம்பரத்தின் பூசைவிதி துர்க்கைபூசை
ஏற்றுவேன் அட்டகெஜ அட்டநாகம்
இயல்பான அட்டாங்க வாசியோடு
போற்றுவேன் நந்திபெலிக் கொடிக்கம்பத்திற்
புகழாக மவுனத்திற் பூசைபண்ணே. (4)

பண்ணவே சிவயோகம் அனுட்டானங்கள்
பண்பாகத் திருநாமம் பாங்காய்ச்செய்து
யெண்ணவே மவுனமுதற் சூரியபூசை
இலகுசிவ மாலைசிவ லிங்கபூசை
நண்ணவே ரசலிங்க சுயம்பாம்பூசை
நாற்பத்து முக்கோண சதாசிவத்தின்பூசை
உண்ணவே மஹேஸ்பரரும் ருத்திரன்பூசை
உறுதியாய் மவுனத்தி லூணிச்செய்யே. (5)

செய்யவே கொங்கணர்தான் கடைக்காண்டத்தில்
திறமாகப் பூசைவிதி செப்பினார்கேள்
உய்யவே அவர் நூலெங் நூலும்பாரு
உறுதியாய் மனந்தேற முருமையாகும்
டையயவே விழிபுதைத்து விண்ணுக்கப்பால்
பளிச்சென்று தீபவொளி பார்க்கப்பார்க்க
மையமாய்க் கண்கடுத்தால் உருட்டிப்பாரு
வாசலிலே குவளையா மருவிப்பாரே. (6)

குகைவாசல் கார்க்க.

பார்க்கையிலே பூரணத்தின் மாத்திரைதானென்று
பரிவாக ரேசகத்தில் மாத்திரைதானென்று
ஏர்க்கையிலே லாடவிழி கண்ணேட்டத்தி
விருகின்ற மேல்வாசல் திறக்கும்பூட்டு
கார்க்கையிலே குகைவாசல் கார்த்தாயானல்
கற்பழியா தொருநாளுங் கண்தூங்காது
சேர்க்கையிலே யிதுபோத மவுனவீடு
திடங்கொண்டால் புலியூர்க்குச் செல்லலாமே. (7)

செல்லலாம் சிதம்பரத்தின் நடனங்காணச்
செப்புகிறேன் சக்கரத்தி னியல்புசொல்வேன்
வெல்லலாம் வாமத்தில் வாமிவாலை
வெகுகாமி வெகுமோகி வெகுசொரூபி
சொல்லலா மிடகலையாற் றியானஞ்சத்தி
தொந்தமென்றே ஆடுதற்குச் சுரதராகி
மல்லலா மயேஸ்பரியாள் விசுத்திமீறி
மாறியா டும்மவுனி வாழ்கண்டத்தே. (8)

கண்டத்தே புரியட்ட மிருத்துவாசி
கண்பார்வை விழிமருட்டாற் கலந்தயோகி
அண்டத்தே சிலயோகி யந்தரங்கி
ஆசையினு விடக்காலை மாறியாடி
விண்டத்தே குண்டலியாஞ் சத்திசத்தி
மேல்வாசற் குள்ளாக விழிமேலாடம்
பிண்டத்தே பாயாமல் விண்ணாட்டத்திற்
பேசாமல் மவுனமுத்தி யாடினாரே. (9)

ஆடியதோர் பூச்சக்கரம் சத்தலோகம்
அடுக்கடுக்காய் சத்தசா கரமஞ்சுள்
ஆடியதோர் கிரிகையிலே சித்தாந்தத்தில்
அகண்டபரி பூரணமாம் வேதாந்தத்தில்
ஆடியதோர் கூத்தெல்லா மாத்தாளாலே
அருமைந்த னாசையினால் சித்தாந்தங்கள்
ஆடியதோர் மன்மதனாங் காரம்நீங்கி
ஆடினால் திகம்பரமா யாடுங்கூத்தே. (10)

## சிதம்பரச் சக்கரம்.

கூத்தான சக்கரந்தான் வரையச்சொல்வேன்
கூராக ஆறுவரை நேரேகீறி
கீத்தாக ஆறுவரை குறுக்கேகீறி
கேசரியா மிருபத்தைந் தரையுமாச்சு
மாற்றான அரையொன்றில் அரைஐந்தாக
வரைகீறல் நால்மூலை நால்முக்கோணம்
பார்த்தாலே நடுக்கோணஞ் சதுரமாகும்
பண்பாக யிதினுள்ளே விந்துபோடே (11)

விந்துவட்டச் சுழினையிதில் திரிகோணந்தான்
விளங்கவே ரேகைவரை ஒழுங்காய்க்கீறி
அந்தவட்டத் திரிகோணம் நூற்றிருபத்தைந்தும்
அரைதோறும் அட்சரங்க ளறியச்சொல்வேன்
முந்தியதோர் அரையொன்றி லரையைந்துக்குள்
மூர்த்தியாம் சிவயநம வென்றுமாறி
செந்தழலாம் நடுக்கோணஞ் சிகாரமாச்சு
தீர்க்கமுறத் திரிகோண மகாரமாச்சே. (12)

ஆச்சிதுக்கு ளிடபாகம் நகாரமாச்சு
ஆதியாங் கோணத்துக் கெதிர்கோணத்தில்
ஆச்சிதுக்குள் யகாரந்தான் மறுகோணத்தில்
அடைவாக வகாரமிடு ஐந்துமாச்சு
ஆச்சிதுக்கு ளரைவிந்து நாதங்கூட்டி
அட்சரங்கள் தப்பாமல் மாறியாடு
ஆச்சிதுக்கு ளடுத்தரையா மைந்துக்குள்ளே
அடைவாக நடுவரையில் நகாரமாக்கே. (13)

ஆக்கடா முதற்கோணம் யகாரம்போடு
அடுத்திடையில் வகாரமிடு முதற்கோணத்தெதிரே
தாக்கடா சிகாரமிடு மறுகோணத்தில்
தப்பாமல் மகாரமிடு ஐந்துமாச்சு
நோக்கடா தீக்கண்ணால் மாரனானும்
நட்பமா யணங்கனென்ற மாரணந்தான்
போக்கடா பின்பல்லோ வாசித்தம்பம்
புகழாக நமசிவய வென்றுபூணே. (14)

பூணவே பிரமாட்சர மைந்தினாலே
புகழாக யவசிமந வென்றுமாறித்
தோணவே தம்பனமாம் வாசித்தம்பம்
துரியவெளிக் குள்ளொளியா மினிமேற்கேளு
காணவே யிதினிடை கோணமைந்தில்
நாசிவிட்டு வாசலின்மேல் வாசலூடு
ஊணவே ரேசிக்க மேலேதாக்கு
ஒளியான விழிநோக்கி யுரைக்கப்பாரே. (15)

பாருநீ யிந்தரைக்கு ளிடபாகத்தில்
பரிவாக வயநமசி யென்றுமாறி
தீருநீ கண்டத்தே யிருத்தியூது
தேருதற்கு உச்சாட னத்தைச்சொல்வேன்
காருநீ உள்ளரையில் வகாரசத்தி
கைமுறையாய் முதற்கோணஞ் சிகாரம்போடு
சேருநீ யிந்திடையில் மகாரம்போடு
சிறப்பாக முதற்கோணத் தெதிரேகேளே. (16)

கேளுநீ நகாரமிடு மறுகோணத்தில்
கெட்டியா யகாரமிடு ஐந்துமாச்சு
வாளுநீ யிந்தரையி னிடையிற்கேளு
மகத்தான நடுவரையில் மகாரம்போடு
ஆளுநீ முதற்கோணம் நகாரம்போடு
அடுத்திடையில் யகாரமிடு முதற்கோணத்தெதிரே
தாளுநீ காலேயிடு மறுகோணத்தில்
சாரவே சிகாரமிடு ஐந்துமாச்சே. (17)

ஆச்சப்பா நயவசிம யென்றுமாறில்
அதிமோக மோகனமாம் அமிர்தஞ்சிந்தும்
வாச்சப்பா நிராகாரத் தேகமாகும்
மகத்தான கத்திநடு வோடும்பாரு
மூச்சப்பா மகாரமதை மாலெழுத்தாமென்பார்
மூடர்சொல்வார் பெரியோர்கள் மவுனமென்பார்
எச்சப்பா ஞானமது லோகத்துக்கு
இதைவிட்டு யிந்தரைக்கு ளிடப்பாகத்தே. (18)

இடையான வாமபா கத்திற்கேளு
யியல்பாகப் பரைவசியம் செகவசியமாகும்
அடையான நடுவரையில் யகாரம்போடு
அப்பனே முதற்கோணம் வகாரம்போடு
உடையான சிகாரமிடு யிடப்பாகத்தில்
உறுதியாய் முதற்கோணத் தெதிரேகேளு
சடையேறும் மகாரமிடு மறுகோணத்திற்
சதுர்முகவன் நகாரமிடு ஐந்துமாச்சே. (19)

ஆச்சடா யிவ்வண்ணம் கால்தலையாய்மாறி
ஆடிடுவாய் வசிமகய வென்றுதானே
பாச்சடா ரெண்டான கீழரையைத்தொட்டுப்
பரிவாக ஐந்தரையி லிருபத்தைந்தும்
வாச்சடா யிவ்விதி மறுவிதிக்குள்
வகையாக நூற்றிருபத் தைந்தும்போடு
பேச்சடா இனியேது சொல்லப்போறேன்
பிறத்துருவம் சூலமிட்டுப் பக்கஞ்சேரே. (20)

சேரப்பா சுழிமுனையை இடைபின்னோடு
சேர்த்தபின்பு இடையிலே உகாரம்போடு
சாரப்பா பிங்கலையில் அகாரம்போடு
சந்தியிலே ஓங்காரந் தன்னைப்போடு
காரப்பா சூலத்துக் கிடையிற்கேளு
கைமுறையாய் விந்திட்டு மகாரம்போடு
தூரப்பா பாராமல் முடியைப்பார்த்தால்
சொற்பனத்தின் அவத்தையடி மாய்கையாமே. (21)

## அஷ்டகுப்ப சிதம்பரபூசை.

ஆமபபா இதுவல்லோ மாறிமாறி
ஆடுகின்ற நடனசக் கரந்தானையா
ஓமப்பா சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
ஒளியான குண்டலியாம் சத்தியோகம்
தாமப்பா ராசிதங்கத் தகட்டிற்கீறி
தாம்பிரகும் பத்திலிட்டுத் தண்ணீர்வார்த்து
வாமப்பா மாங்குலையும் தேங்காயும்வைத்து
வளமான திரிகோணத் தெர்ப்பைசாத்தே. (22)

சாத்தடா பட்டுவஸ்திர முப்புரிநூல்சுற்றி
தருவான கும்பத்திற் சொர்னம்போட்டு
சாத்தடா புனுகுசவ்வா தோடுபுஷ்பஞ்
சந்தனமுங் குங்குமப்பூ சார்கற்பூரம்
சாத்தடா குளவிந்த மிதினோடொக்கத்
தானரைத்துக் கும்பத்திற் றளமாய்பூசிச்
சாத்தடா ஆபரணம் புஷ்பமாலை
சாருவாங் கும்பத்தைத் தளமாய்வையே. (23)

வையப்பா பச்சரிசி பரத்திக்கொண்டு
வளமான விந்திட்டு மவுனந்தாக்கிச்
செய்யப்பா பின்பல்லோ அஷ்டகும்பம்
திடமாக அங்கங்கே ஆபரணமணிந்து
மெய்யப்பா கும்பமெல்லா மிவ்விதந்தான்
விளங்கவே அஷ்டகும்ப பூசைசெய்து
உய்யப்பா ஓமகுண்டங் குண்டலியாஞ்சத்தி
உத்தமியைத் தோத்திரஞ்செய் யுரைக்கத்தானே. (24)

தானென்ற சத்திபதி ஞென்றுங்கூட்டி
தடையறவே அட்டசத்தி வாலையெட்டும்
கானென்ற ஓமத்திற் கடலைமொச்சை
காராம ணிப்பயரு பசும்பயரிஞேடு
வானென்ற நெல்பொரிதேன் சர்க்கரையிஞேடு
வாழைக்கனி இதுவெல்லாம் வாரித்தூவு
கோனென்ற குருநந்தி சூட்சம்செய்து
கொடுஞ்சுருக்கு ஓமத்தின் சமித்தைக்கேளே. (25)

### சமித்து விபரம்.

கேளப்பா மாவிலிங்கு விளாஅத்திகொச்சி
செடியான அரசுடனே வில்வம்யெட்டி
வாளப்பா மாஞ்சிப்பி இதுவெட்டுந்தான்
வளமான எரிதுரும்பாம் அசுராளண்டார்
நாளப்பா துட்டகண பூதமெல்லாம்
நாடாது ஓமத்தில் வலுத்தசித்தி
மூளப்பா செபஞ்செய்து ஓமசாந்தி
தீர்க்கமாம் கும்பத்திற் போடுபோடே. (26)

போடப்பா பரமானம் பால்பழங்கள்
புகழான தாம்பூலம் நெய்வேத்தியங்கள்
நாடப்பா கும்பத்திற் பிறகுசேரும்
நலமாக நூற்றிருபத் தைந்துமோது
சூடப்பா வில்வபத்திரம் சுகந்தபுஷ்பக்
தோத்தரித்து தூவியே சுழினைதாக்கு
வீடப்பா பிலத்துநிந்தச் சக்கரந்தான்
வெளியொளியாய்ப் பூரணமாய் விளங்குவாரே (27)

வாரான பரமானம் பலகாரங்கள்
மதுவான தேனோடு சர்க்கரைதேங்காயும்
பேரான யிளநீர்கள் பால்பழங்கள்
பிதத்தாதே தாம்பூலம் நெய்வேத்தியம்செய்து
கூறாக சோடசமா முபசாரங்கள்
கொடுத்திடுவாய் கற்பூர தீபந்தானும்
வீறாக தேனின்முத்திரை யோனிமுத்திரை
மேலான சின்மயத்தின் முத்திரையுங்காட்டே. (28)

காட்டியே அர்ச்சித்துத் தெண்டஞ்செய்து
கரத்தினில் விபூதி லலாடத்தில்பூசி
சூட்டியே ஓம்சரந் தன்னைப்போடு
சுழினையிலே திலதமிடு தேகங்கட்டும்
காட்டியே அட்டகும்பந் தனக்குப்பூசை
நலமாக அவரவர்தம் மூலபீசம்
தீட்டியே தோத்திரஞ்செய் வசமாமட்டுஞ்
சிதம்பரச் சக்கரத்தின் பூசைகாணே. (29)

## கொங்கணருக்குக் காயாச மீய்ந்தது.

காணப்பா யிப்படியே கொங்கணர்தான்
கைமுறைகள் சொல்லவில்லை மூலர்தானும்
பூணப்பா யிந்தமுறை சக்கரத்தைப்
போதித்துக் காயாச மவருக்கீய்ந்தேன்
தூணப்பா தரும்பாகுந் தரும்புதானுஞ்
சுகாதீதக் காதலா னந்தமாகும்
வீணப்பா போகாது யிந்தப்பூசை
வேதாந்தங் கைக்குள்ளாம் விந்தைக்கட்டே. (30)

விந்துநிலை பற்றுட்டா லிந்தப்பூசை
வீணாசை கொள்ளாதே சமாதிமூட்டு
மந்தகதி யாகாது மறலிவந்தால்
மறப்போமோ சித்தாந்த மாடேகேளு
விந்துவென்ற பலகையின்மே லிருந்துகொண்டு
யிதமாக மதியமூர்த்த முண்டுதேரு
வந்துதான் மேருவின்கீழ் குகைபிற்செல்லு
வாசலின் பூட்டுத்தெரிக்குங் கற்பம்கொள்ளே. (31)

### ரசகற்பங் கொள்ள.

கற்பமென்ற கற்பமெல்லாங் கற்பமல்ல
காசினியிற் செடிபூடு கற்பமல்ல
கற்பமென்ற ரசகற்பம் மகாகற்பந்தான்
கைமுறையாய்க் கடுகளவாய்க் குன்றிமட்டுங்
கற்பமென்ற வருஷமொன்று கொண்டாயானால்
காலனென்ற பேச்சேது பிரமநிட்டை
கற்பத்தை விட்டேதான் யுகம்வரைக்குங்
கருதியே சமாதியுற்றால் கதிகாணுதே. (32)

காணுதே போகாமலேங்கிடாமல்
காலேதோ தலையேதோ யென்றெண்ணுமல்
தோணுதே தோற்றுவிக்கும் கணேசன்மூலர்
துண்டத்தின் கீழ்நுனியி னொளியைக்கண்டால்
பூணுதே பூணுகிற சுவாதிட்டானம்
புகழான அசைநாபியி லொளியைப்பாரு
வீணன வீணல்லாச் சுழினைக்கண்டம்
வேதாந்தத் துரியமது மவுனந்தானே. (33)

தானென்ற மவுனமணி பூரகந்தான்
சானகியு மாலுகிற்கு மொளியைப்பாரு
தானென்ற அனுகதம்பின் கடைக்கண்பாரு
கதிரான ருத்திர னொளியைப்பாரு
வாவென்ற காலடங்கும் விசுத்திமூலம்
மயேசனுட கண்ணொளியை மருவிப்பாரு
வானென்ற ஆக்கினையில் சச்சிதானந்த
மணிமேவும் சதாசிவத்தி னொளியைநோக்கே. (34)

நோக்கிறதோர் வகைகேளு ஒருபோதுண்ணு
நோகாமற் பின்கலையி லோடும்போது
நாக்குநுனி சுவைபாக மாறுங்கொள்ள
நலமான உமிழ்நீ ரிறக்கங்கொள்ள
மூக்கினிலே பின்கலையி லோடும்போது
மூட்டுவா யிப்படியே முக்கால்சொன்னேன்
பாக்குவெற் றிலையருந்தி யிப்படியேகொள்ளப்
படுக்கும்போ திடக்கரத்திற் றலையைத்தாங்கே. (35)

யோகம்,

தாங்குவா யனுபோகம் பின்கலையில்கூடுஞ்
சையோகம் சிவயோகந் தானேயாகும்
தூங்குவது மவுனமாய்த் தூங்குசொன்னேன்
சுயம்பிரகா சம்மதிலே நினைவாய்ப்பாரு
ஓங்குவது பிரணவத்தி லொடுக்கமாகும்
உயிர்நிலைக்கு மேல்வாச லூடுதாக்கு
வாங்குவது யிடையூடு வாங்குவாங்கு
வளமான ரேசகந்தான் மேலேதாக்கே. (36)

தாக்கையா மேல்வாசற் குள்ளேசென்று
சாக்கிரத்திற் கண்மூடி சதாநித்தம்பாரு
நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும்
நோகாமற் பார்த்துவரக் கண்திறக்கும்
ஆக்கையா பொறிகளைந்து மடித்துத்தள்ளில்
ஆனந்த மதியமுர்தஞ் சிந்துஞ்சிந்தும்
வாக்கையா பேசாதே சமாதிமூட்டு
மைந்தனே பூசையெல்லாம் வழங்கும்பாரே. (37)

வளங்கிநின்ற பரைஞேயம் நடுலாடத்தில்
வைத்துப்பார் விழிரெண்டு மருவுங்காலம்
உளங்கொண்ட புரியட்ட பூரணமுமேலாய்
ஒருமையினல் ஒளிவெளியா யோடியேறும்
தளங்கொண்ட சமாதியுறும் பிரமநிட்டை
தத்துவலய நிருவிகற்பஞ் சவ்விகற்பம்
களங்கொண்ட ஆரூட மவுனமட்டுங்
கைமுறையாய்ச் சமாதியிது உரைக்குந்தானே. (38)

தானென்ற தியானமைந்து முன்னேசொன்னேன்
தாரகமாம் நிராகார மைந்தினுள்ளே
கானென்ற தவ்விடங்கள் ஒளிகள்காணக்
கருவான தியானமிது கண்டுசொன்னேன்
மானென்ற சத்தியைந்துந் தியானமங்கே
மந்திரபீ சாட்சரங்கள் வைத்துப்பாரு
தேனென்ற சடாதார யோகத்தக்குத்
தியானமிது கண்டுரைத்து வாசியூதே. (39)

வாசியிலே இடகலையில் பூரகந்தானிரண்டு
மகத்தான சுழிமுனையிலே கும்பகந்தானு
தேசியென்ற பின்கலையில் ரேசகந்தானென்று
தெளிவாகப் பூரணையைத் தொட்டேசம்பு
நேசியிந்த முறைவிதம் அமாவாசைதொட்டு
நிலைபாக வளர்பிறையைத் தாக்கிமாறு
மாசியிலே பித்தநீர் பாயாவண்ணம்
மதிபார்த்துக் கண்ணாலே நோக்குவாயே. (40)

நோக்குவது நிராதார மாறும்பாரு
நுனியான தமர்வாசற் குள்ளே தாக்கு
தாக்குவது ரேசகமாங் கண்டம்பாயுஞ்
சத்தியிடை பாயாமற் பின்கலைக்கேரேசி
போக்கதனில் மேல்வாசல் பூட்டுவிட்டார்
பொரியேது மனத்தோடே பூதாதையா
ஆக்குவது வாயுதா ரணையீதாச்சு
அப்பனே சுழிமுனையி லுரைத்துநில்லே, (41)

நில்லடா அக்கினிதா ரணையீதாச்சு
நிட்கலமாய் விந்துவிட்டு நாதமோங்கச்
சொல்லடா திசைநாதங் கிளம்பும்போது
திடமாகப் பூரணமா மதியினுள்ளே
அல்லடா அமுர்தமங் கேகலக்கம்
அடைவான அமுர்ததா ரணையீதாச்சு
கல்லடா வுன்தேகம் காலன்மாண்டான்
காலனென்ற யிடகலைதான் ரவிதானுண்டே. (42)

உண்டதொரு ரவியாலே மதியமுர்தமாச்சு
ஊதியே அனல்கொளுத்தில் நோய்நீர்வேர்வை
கண்டதொரு அப்புதா ரணையீதாச்சு
கல்தேக மானதினுற் தாரணையாம்பூமி
விண்டதொரு மேல்வாசல் திறந்தபோது
விசும்பினுட தாரணையாம் வெளிச்சங்காணில்
அண்டமென்ன பிண்டமென்ன ரெண்டுமொன்றாய்
ஆனதுவே யிருவினையு மற்றதாமே (43)

ஆமிந்த வாசிரவி யூடேசென்று
அற்றதுவே பிராணய மையாசொன்னேன்
ஓமிந்த வாசிரவி மேலேயேறி
உரைத்திட்டார் பிரத்தியா காரமாச்சு
நாமிந்தப் பிரமந்தான் பிரமமாகி
நண்ணுமன மறிவிலே சொக்கிப்போனல்
ஏமிந்த நேயமொடு யியமந்தானும்
யிருக்கையிலே செத்தவன்போ விருக்கப்பூணே. (44)

பூணுவது கன்மமெட்டின் பூசைசொல்வேன்
புகழான கொங்கணர்தான் கடைக்காண்டத்தில்
தோணுவது நந்தியொடு கணேசன்கந்தன்
சொர்ணவயி ரவன்வீர பத்திரன்றன்
காணுவது தெட்சண மூர்த்தி சொக்க
நாதனுஞ் சண்டிகேசன் வெய்யோ னுந்தான்
காணுவது நாற்சதுரந் திசைகளெட்டிற்
காட்டியே கும்பத்திற் செபித்திடாயே. (45)

செபிப்பதற்கு யெட்டுவகைத் தேவதைக்குந்
திடமாக ஐந்தெழுத்தை மாறிமாறிச்
செபிப்பதற்கு யெட்டுவகைப் பலகைசொன்னேன்
திறமாக மணிகள்சொன்னேன் புட்பஞ்சொன்னேன்
செபிப்பதற்கு யெட்டுவகைத் திசையுஞ்சொன்னேன்
திடமாக மனமுரைத்துத் தெளிந்துநீயும்
செபிப்பதற்கு அட்டகன்மம் வாலைசொன்னேன்
சித்தியாம் மச்சமுனி செப்பினரே. (46)

## தம்பனம்.

செப்பினர் கொங்கணரு மொன்றுபோலத்
தெளிவாகு மெந்தனுட தீட்சைபாரு
செப்புகிறே னறுவரை நேரேகிறி
திடமாக ஆறுவரை குறுக்கேகிறிச்
செப்புகிறேன் தம்பனத்தின் கன்மஞ்சொல்வேன்
செயமாக நமசிவய வென்றுமாறி
செப்புகிறேன் யவசிமந வென்றுஉன்னி
சித்திபிடை கலையிருத்த வாசித்தம்பம். (47)

தம்பனமாம் விந்துவொடு யிருகண்ணுட்டங்
சுருப்பில்லா புரியட்ட மாளுங்கோபம்
தம்பனமாங் கோடான கோடிகன்மஞ்
சாற்றுரே னையைந்தாய் மாறிச்செபிக்க
தம்பனமாம் நிராதலத்திற் பஞ்சகர்த்தாள்
தளமான யிந்திரிய விடையமெல்லாந்
தம்பனமா மெடுத்தெடுத்த கன்மமெல்லாஞ்
சாதிக்கு மட்டசத்தி மவுனந்தானே. (48)

மோகனம்

தானென்ற மோனத்தின் கன்மஞ்சொல்வேன்
சார்பாக யிருபத்தைந் தரைக்குள்ளாக
ஏனென்ற மசிவயந வென்றுமாறி
யியம்பகிறேன் நயவசிம வென்றுமாறி
பானென்ற வரைதோறும் கால்தலையாய்மாறிப்
பரமாக வடமுகமாய்ச் செபிக்கமுத்தி
கோனென்ற நந்திகுரு சச்சிதானந்தம்
கும்மென்ற மோகனமா மவுனத்தூணே. (49)

மவுனத்தால் நவசாபம் நிவர்த்தியாகும்
மறுபடியே சிவயோக அனுட்டானங்கள்
மவுனத்தாற் சிவதீச்சை சத்திதீச்சை
வளமான அட்டகன்ம மந்திரதந்திரம்
மவுனத்தாற் சித்தியாம் சடாதாரங்கள்
வாசியொடு தியானந்தா ரணைசமாதி
மவுனத்தா லெங்தெந்த மாந்திரீகம்
வனுக்கொள்ளும் பிரத்தியா காரம்பூட்டே. (50)

மாரணம்.

பூட்டவே மாரணத்தின் கன்மஞ்சொல்வேன்
புகழாக ருக்திரசங் காரமாகும்
நாட்டவே சிவயநம வென்றுமாறி
நவிலுகிறேன் மநயவசி யென்றுமாறி
ஆட்டவே யிருபத்தைந் தரையில்மாறி
ஆங்கார மாரணைச்சங் காரஞ்செய்து
மூட்டவே சத்துருசங் கரமாகும்
முறைமுறையே சகலமுமா ரணங்கள்பாரே. (51)

பாரப்பா ஓம்அங் அவ்வென் றுந்தான்
பரிவாக அட்டசத்தி மூலமாகும்
நேரப்பா விதினாலே கண்மஞ்சித்தி
நிலையாட்டா விதுவெல்லாம் பலியாதொன் றுந்
தாரப்பா ஓடுகிற வோட்டைச்சொல்வேன்
தருகண்டத் தடியில்நின்ற வாசிமூலம்
சேரப்பா வயநமசி யென் றுசொல்லத்
திறவுகோல் மாறியே ஆடினாரே. (52)

## உச்சாடணம்.

ஆடினார் சிமநயவ வென் றுமாறி
அரையிருபத் தைந்துள்ளே ஐங்காயம்பூசி
சூடினார் வாசிதனை மேலேரேசி
துரியஉச் சாடணமாஞ் சங்குநாதஞ்
சாடினார் திசைவாய்வு பத்துங்கூடிச்
சந்திரனும் ரோகணியுந் தயங்கத்தாக்கி
ஓடினார் மாய்கைசத்தி யாட்டம்போச்சு
உரைத்துமன தறிவோடே யுறுதியாச்சே. (53)

உறுதியாம் புலன்போச்சு பொரியும்போச்சு
உட்கோட்டை தளகர்த்தா வோடலாச்சு
அறுதியாய் சத்தியுடன் மையல்போச்சு
அலக்கழிக்கும் வறுமையெல்லா மகன் றுபோச்சு
சுருதியாய் வருகின்ற சத்துருக்கள்போச்சு
துன்பமணி பதினாறுஞ் சூட்சத்தாலே
பிரிதியா யிடக்காலை மாறியாடிப்
பேரண்டஞ் சித்தண்டச் சத்திபோச்சே. (54)

## வசியம்.

சத்தியிடை கால்மாறி யாடுங்கூத்து
தானான பரைமூச்சு உள்ளேயாச்சு
முத்தியாம் வசிகரத்தை முறையாய்ச்சொல்வேன்
முத்தமிழ்சேர் புலத்தியனே ஐயாகேளு
சித்தியாய் நமசிவய வென் றுசொல்லித்
திரும்பியே கால்மாறி வசிமநயவென் று
புத்தியா யிருபத்தைந்து அரையில்மாறி
போடுவாய் அட்சரங்கள் புகழ்வில்வத்தே. (55)

வில்வத்தே ஆதிரைநாள் வெண்பட்டாலே
மிகநன்றாய்க் காப்பணிந்து தூபதீபஞ்
செல்லத்தான் கனிதேங்காய் சர்க்கரைநெய்வேத்தியம்
செய்துகொண்டு வசிமநய வென்றுதோத்திரம்
சொல்லித்தா னூறுருவிற் பிடுங்கச்சொல்வேன்
துடியாக வடமுகத்தின் வேரைவாங்கி
மெல்லத்தா னிழலுலர்த்திப் பலகைசெய்து
விளங்கவே யருபத்தைந் தரையுங்கிறே. (56)

கிறியே யநமசிவ வென்றுமூலங்
கீழ்மேலாய் மேல்கீழாய் வசியமநவென்று
தேறியே அரைகளெல்லாம் மாறியிட்டு
செகவசியம் பரைவசியம் குருவசியமாகும்
மாறியே அட்டசத்தி துர்க்கைபாலாள்
அனந்தனென்ற நாகமொடு கிரிகெஜங்கள்
கூறியே வசியமதாம் உலகமெல்லாம்
குலகோத்திர மானசத்தி வசியமாமே. (57)

ஆமப்பா நந்திபிர காசமாகும்
ஆகாச வெளிவொளியுங் காணலாகும்
தாமப்பா அகத்தீசர் காயாசமீய்வார்
சந்தேக மனதுக்குத் தடையோயில்லை
காமப்பால் விந்தங்கே உரைந்துபோகும்
கல்தேகம் கைலாய தேகமாகும்
சேமப்பா லுதரத்தி னுள்ளேபாரு
சுகாதீதக் காதலா னந்தமாமே. (58)

## ஆகிருஷ்ணம்.

ஆனந்தக் கடலாகி அழைப்புச்சொல்வேன்
ஐயைந்து அரைதோறும் சியமவநவென்று
தானந்த வரைதோறும் மாறிமாறி
தாளம்பூச் சாற்றியீ சானம்நோக்கி
ஆனந்தப் பொருளாகி அருணகாந்தி
மாய்கைவிட்டுத் தேவியன்பாய் வருவாள்பாரு
தேனந்தத் தேவர்களும் பாருள்ளோருந்
திருப்பதியாம் ஆக்கிருஷ்ணந்தான் செயமாம்பாரே. (59)

### பேதனம்.

செயமான பேதனத்தின் கன்மஞ்சொல்வேன்
திறமாக வசியம வென் றுமாறி
நயமாக யிருபத்தைந் தரைக்குள்ளாக்கி
நன்றாக ஆயிரத்தெண் ணூருவிற்சித்தி
பயமாகப் பத்தியொடு ஒருமையாகிப்
பலசிந்தை விட்டுவிட்டுப் பண்பாயோதி
சுயமான பசிகோப முறக்கஞ்சோம்பல்
துன்மார்க்க மைதினங்கள் துட்டர்காணே. (60)

### வித்து வேடணம்.

துட்டிக்கப் பேதிப்பாம் பேதனத்தைச்சொல்னேன்
சுகவித்து வேடணத்தைச் சொல்வேன்கேளு
அட்டிக்க மயவசி யென் றுதானே
ஐயைந்தா யரைதோறும் மாறிமாறி
திட்டிக்கப் பிரமவித்தை வித்துவேசித்தி
தேகத்தில் சேர்ந்ததொரு மாய்கையெல்லாம்
மட்டிக்க மனக்குரங்கு கொம்பேறுது
வந்துதடா காயசித்தி வாசியோகம். (61)

வாசியென்ற வாமியடா யிடகலையாஞ்சத்தி
வாலைசிறு பெண்மாய்கை வளங்குந்தேவி
தேசியென்ற மவுனியவள் கண்டத்துள்ளே
சித்தருக்குத் தாய்போலே சிறந்தாளாத்தாள்
தேசியென்ற சடாதாரத் தேவன்தேவி
நிராதாரப் பூசைவிதி நெறியாய்ச்சொல்வேன்
ஆசியென்ற குண்டலியாம் மூலத்தோங்கு
ஐங்கரனார் பூசைதனை அன்பாய்ச்செய்யே. (62)

செய்யவே துண்டத்தின் முனைக்கண்நாட்டி
திட்டிக்க ஒளியாகித் தோத்திரமேநன்றாய்
செய்யவே ஓம்அங்உங் அவ்வும்உவ்வும்
சிறியும் சிவாயகக் கணபதியேநமாவென் று
உய்யவே ஆயிரத்தெண் ணூருனிற்சித்தி
ஒளிகண்டால் மூலாதா ரத்தின்சித்தி
மையலாய் பெண்மாய்கை வாரதென்னும்
மாரனைச் சங்கரிக்கும் பிரமம்பாரே. (63)

## பிரமன்பூசை.

பாரப்பா அசபையிலே பிரமன்பூசை
பரிவாகச் சொல்லுகிறேன் நன்ருய்க்கேளு
சேரப்பா பிர்மதிஷ்டிக் குள்ளேயாகும்
செகமெல்லாம் படைத்தகர்த்தன் பூசைமார்க்கம்
பேரப்பா ஓங் அங் உங் நமசிவாயம்
பிர்மதே வாயநம வென் றூஓது
சாரப்பா சுத்தவெள்ளை பிரகாசிக்கும்
சரஸ்பதியும் வார்த்தைசொல்வாள் கலைக்கெல்லாமே. (64)

ஆமப்பா நாலைந்து பாஷைக்கெல்லாம்
ஆசுமது ரஞ்சித்திர வித்தாரங்கள்
ஓமப்பா சிவயோக ஞானபீடம்
உற்பனமா யானந்த வரைக்குமேற்றி
காமப்பால் கட்டிவைப்பாள் அமுர்தமீய
கபால வாசல்திறப்பால் கருத்தைமுட்ட
தாமப்பா சாதகமே செய்யச்செய்யத்
தாள்திறக்கு மப்பாலுந் தடைவாராதே. (65)

## நவசாபம் தீர்க்க.

வாராது பிறபில பிலிந்துகாதம்
மருவியங்கே செனிக்கும்போ தமர்ந்தவாழ்க்கை
தீராது பிரபஞ்சத் தாசைவாழ்க்கை
செகமெல்லா மூண்டுடுத்திச் சையோகித்துச்
சாராது ஞானவழி யேறுங்காலம்
சாபமென்ற நவசாபம் போட்டதாலே
சேராது வதினாலே சாபகோபந்
தீர்ப்பதற்கு வகைசொல்வேன் உண்மைகாணே. (66)

## விஷ்ணுபூசை.

காணவே சுழிணையிலே மவுனபூசை
கண்ணூர மகாரவிந்து மாயோன்பூசை
தோணவே விழியிரண்டும் சொக்குங்காலம்
சூரியன்போல் வட்டமாய்ப் பிரகாசிக்கும்
பூணவே நீலம்போல் கார்வண்ணன்ருன்
பொன்மாய்கை கருப்பாகப் பூண்டுவீசும்
வேணதொரு பலமேக வர்ணங்காணும்
மேலான லட்சமிப்பெண் மேவுங்காலே. (67)

காலான சத்தியடி வகாரத்தோடு
கண்டத்திற் காலாச்சு சிகாரமீசன்
மேலாக ரெண்டுமொன்ருய் சுத்தியாச்சு
வெளியொளியாங் குருவர்ணம் ஒளியைக்கண்டால்
மாலான விஷ்ணுவுஞ் சானகியுங்கூடி
மாதுளம்பூ வர்ணமாய் ஒளியைக்கண்டால்
சாலோக சாமீப மிரண்டும்போச்சு
தாரணிக்கோ ரெட்சகர்த்தாள் தயவுண்டாமே. (68)

உண்டான மகாரத்தால் மவுனியானுள்
ஓமென்றே மேல்வாச லூடுதாக்கு
விண்டான ஓம் அங் உங் மசிவயகவென்று
விஷ்ணு தேவாகம வென்றேயோது
கண்டாயோ பசுமரத்தி லாணிபோலக்
கண்பொருத்தால் அருணநிறங் காந்திவீசும்
கொண்டாடும் பூசையிது யிதனைவிட்டுக்
கூறுகெட்ட சித்தார்த்தி குறிகாணுரே. (69)

குறிவைத்துக் கண்ணோட்டங் கூர்ந்துசொல்வோன்
குருவான ஆச்சாரி யவனேசித்தன்
நெறிதப்பிச் சொல்கிறவ னுசானல்ல
நிராதாரக் குருநாதன் சொல்லவேண்டும்
அறிவுக்குள் மனஞ்சிக்கி அறிவில்மாளு
மதினாலே பூரணத்தை யறியலாகும்
உரிவெண்ணெய் கரத்திருக்க தேசக்தோறும்
ஊர்சுத்தி கெய்க்கலேந்த லுததர்காணே. (70)

காணப்பா மவுனத்தின் வாசிமூலம்
கருத்துவைத்துக் குருசொன்னால் சாபம்நீங்கும்
பூணப்பா வென்றுசொன்ன ஆசானுக்குப்
பொன்கோடி ஈய்ந்தாலும் பொருளொப்பல்ல
வீணப்பா லோகத்தில் ஆசானென்று
வீண்பேச்சால் உபதேசம் வைப்போமென்பான்
ஊணப்பா குருக்காட்டித் தாக்குனேக்கு
உண்மைசொல்லத் தெரியாது அசட்டுமாடே. (71)

மாடுபோல் திரிவார்கள் பெண்டுபிள்ளை
வாழ்வதற்குப் பிழைப்புககாய் ஒன்றைச்சொல்லி
வீடுதோறும் போய்த்திரிந்து பணங்கள்வாங்கி
வேணபடி உபசாரம் குழைவாய்ப்பேசி
காடுதோறும் அலைகிறதோர் குருக்களாகி
நான்பெருமை யென்றுசொல்லி நாய்களப்பா
ஆடுவது அவனுடைய கூத்தேகூத்து
அடிபணிந்து தொழுவதில்லை ஞானிதானே. (72)

## மயேஸ்பரன் பூசை

தானான மயேஸ்வரன்றன் பூசைமார்க்கஞ்
சாற்றுகிறேன் நிராதாரம் மேலேகேளு
வானான மயேஸ்பரியாள் வாமிவாமி
வாதசித்தி சவுட்டுவித்தை வளங்குந்தேவி
கோனான ரசகுளிகை செய்பற்பங்கள்
கொள்வதால் நாதவிந்தால் வழலைமூட்டி
ஊனான காலறிந்து தலைமீதேறி
உறுதியாய் ரசபற்ப மூணிக்குள்ளே. (73)

கொள்ளப்பா வருடமொன்று சமாதிமூட்டு
குகைவாசற் குள்ளாகத் தேவிபூசை
விள்ளப்பா பச்சைவர்ணம் ஒளிதான்வீசும்
மேவிப்பார் யிடதுகலை கண்ணோட்டத்தில்
உள்ளப்பா கண்டத்தி லிருத்திபூது
ஓகோகோ சுவாசத்தில் ஊடாடாமல்
மெள்ளப்பா ரேசிக்க மேலேதாக்கு
விழிரெண்டுங் காலூணா மெருட்டிநோக்கே. (74)

நோக்குவாய் கண்கடுத்தால் மிளகுரைத்துப்போடு
நுட்பமாய் வெண்ணெய்ரெண்டு பாதம்பூசு
ஆக்குவாய் மூதண்டக் கிபாழந்தன்னை
அக்கியிலே யொருபோதாய் நித்தியங்கொள்ளு
சீக்கிரமாய்த் தீக்கொளுத்து காந்திதாச்சு
சிறப்பாகப் பின்கடைக்கண் ருத்திரபூசை
வாக்கான கால்மேலாஞ் சடாசாரத்தில்
மருவிநின்ற வாசியிடை மவுனத்தீயே. (75)

தீயென்று லனுகதமாம் வலக்கண் ரோட்டம்
தெரிசனையும் சிவயோகந் தீயாய்க்காணும்
வாயென்றால் வகாரசித்தி வாமியாலே
வாசியிலே பூரிப்பாய் தீயால்ரேசி
தாயென்ற மவுனத்தி வலக்கண்ணுக்கும்
சச்சிதா னந்தவரை சார்ந்துபற்றும்
ஓயென்று லோயாது சங்காரகர்த்தன்
ருத்திரிப்பெண் பார்வதியா ளுமையாள்மேலே (76)

மேலான காலிடைக்குள் மாறியாடி
மெச்சுமவள் காலடிக்குள் சிகாரமீசன்
மாலாகி மவுனமென்ற சுளினைக்குள்ளாய்
மாறியங்கே யாடினார் ஞானயோகம்
பாலாகி மதியமுர்தந் சிந்துமுன்னம்
பாயவே வாசியிலே வாமிபாகம்
நாலான பூரணத்தை யுள்ளேதாக்கி
நடிக்கின்றார் அண்ணாடி யுண்ணாடிக்கே. (77)

அண்ணாக்கு.

அண்ணாக்கு ளுண்ணாக்கே பற்றவேதான்
அகாரமுதல் பதினாறு மிதற்குள்ளாக
விண்ணாடிப் பாயுமநதக் காலமேற
விழிரெண்டும் நடுநிற்க மேவிபார்க்கக்
கண்ணாடி நீங்குமப்போ தமர்வாசல்புக்கி
கால்மாறி யாடுமங்கே சிங்குரேசி
பண்ணாடி ஆறுவரைக் கேறும்வாசி
பளிச்சென்று கோடிரவி காந்தியாமே. (78)

ஆமிந்த வாசியினால் மயேசன்பூசை
ஆச்சடா ருத்திரன்றன் பூசைமார்க்கம்
வாமிந்த ஒங் அங் உங் வயநமசியென்றே
மயேஸ்பர தேவாயநமா வென்றுமாறி
ஓமிந்த ஓங் அங் உங் சிவாயநமவென்று
ருத்திர தேவாயநமா வென்றுமாறி
தாமிந்த சிவயோகம் வாசியோகம்
சாதித்த பூசையிது மவுனந்தாக்கே. (79)

மவுனமென்றால் நாலுவகை மவுனமூண்டு
வாசியிலே மவுனமொன்று கண்டத்தானால்
மவுனமென்ற சடாதார நிராதாரத்தில்
மவுனமொன்று சாக்கிரமா மதிலேநில்லு
மவுனமென்றால் மேல்வாசல் மவுனமொன்று
வாய்திறந்தால் விந்துவிலே மவுனமொன்று
மவுனமென்றால் வாலையடா வாமியோகி
மகத்தான சரஸ்பதி லெட்சுமியும்பாரே. (80)

பாரிந்த வட்டமது பிரமனுக்குப்
பரிவான விஷ்ணுக்குஞ் சேர்ந்தவாலை
நேரிந்த வாசியினால் புவனையானால்
நெரியான ருத்திரியாள் திரிபுரையுமானால்
காரிந்த யாமளைதான் மயேஸ்பரியுமானல்
கருணை தரும் சாமளைதான் மனோன்மணியுமானால்
சாரிந்த தேவியைந்து தீட்சையிலே
சதாசிவத்தின் ஒளிகாணப் பூசைகேளே. (81)

பூசையென்றால் சச்சுதா னந்தபூசை
புகழான தோத்திரமுன் தொக்குஞ்சட்சும்
பூசையென்றாற் சிங்துவையாக் கிரணத்தோடு
புகழான யிந்திரிய விடையமைந்து
பூசையிலே விந்துவல்லோ நிலைக்கவேணும்
பூரணத்திற் றிசைவாய்வு நாதங்காணும்
பூசையிலே மானதமாம் விந்துநாதம்
பூரணமா மதிக்குள்ளே மாறியாடே. (82)

மாறியே யிடைக்காலை யாடக்கேளு
வகாரமென்ற மனோன்மணியாள் மாறியாட
மாறியே சிகாரவிந்து நாதத்தொப்பாய்
மகாரமொடு ஆக்கிருஷ்ண மாறியாட
மாறியே சதாசிவனும் கூத்துப்பார்த்து
மனோன்மணியை வரவழைத்து ளண்டமாடி
மாறியே ஆடுகிற அட்டதர்க்கி
மாகாளி வடமுகத்தில் மாறினாளே. (83)

நாளென்ன ரவியென்ன சோமனென்ன
நந்தியென்ன மதியென்ன தீய்நானென்ன
கோளென்ன கோபமென்ன மோகமென்ன
கொடிதான மாரனென்ன மால்தானென்ன
பாழென்ன மூப்பாழும் பாழாங்காலம்
பரையென்ன நாதமென்ன விந்துவென்ன
ஊழென்ன பத்தினதீ யுரைத்தகாலம்
ஒருமனதா யறிவுநின்று வுறைக்கும்போதே. (84)

## கொங்கணர் பெருமை.

போதமென்று நிறைந்துநின்ற பொருள்மெய்ஞானம்
பூரணமாம் சமாதியின்றன் நடனவோசை
நாதமெல்லாம் நிறைந்துநின்ற நடனமூர்த்தி
நளினபரா பரையோடு மாறியாடி
வேதமெல்லாம் நிறைந்துநின்ற வெளியாமண்டம்
வெட்டவெளிப் பொட்டலது தீக்காடாச்சு
சூதமென்ற சொரூபமணிக் குளிகையாலே
துடியான கொங்கணர்தா னேறினரே. (85)

## சித்தர்கள் குளிகை கொடுத்தது.

ஏறினு ரவரைப்போல் சித்தர்காணேன்
ரிஷிகளென்ன ஞானியென்ன பேருங்காணேன்
மாறினர்ஆறுவரை கண்டுதேறி
மனமடங்கி அறிவிழுந்து நடனத்துள்ளாம்
தேறினர் சொரூபமணிக் குளிகையாலே
திரும்பினர் க்ஷணத்தில்வந்து பிழைத்தோமென்றார்
ஆறினர் அண்டத்தில் அறிவில்நின்று
அமர்ந்திருந்தார் காயாச மவருக்கீய்ந்தேன். (86)

ஈய்ந்தேனன் சட்டைமுனி திருமூலர்க்கு
மியல்பான சுந்தரர்க்கு மவுனிகட்கும்
ஈய்ந்தேனன் மேருவிலே கைலாசத்தில்
ஏகியந்நாள் மணக்கோலங் காணவேண்டி
ஈய்ந்தேனன் நவகோடி சித்தர்கட்கும்
இழகுதமிழ் கோரக்கர் தமக்குமன்பாய்
ஈய்ந்தேனன் சதாசிவனும் பரையுங்காண
எளிதாக மானதத்தில் பூசைசெய்யே. (87)

பூசையிலே ஹூங் அங் உங் யநமசிவ வென்று
புருவமையம் சதாசிவத்தே வாயநமாவென்று
பூசையிலே மானதமா யூதுங்காலம்
புகழான சிவயோகம் பூட்டலாகும்
பூசையிலே சிவபூசை கிரிகைபூசை
பூண்டபின்பு நாற்பத்து முக்கோணபூசை
பூசையிலே வாமத்திற் சத்திபூசை
புருவமையத் தாயாரைப் பூசைபண்ணே. (88)

பூசித்தால் சடாதார நிராகாரத்தின்
புகழான மானதமே வலுத்தபூசை
நேசித்தால் அகண்டவெளி வொளியாய்காணும்
நெறியான தீக்ஷைவிதி யிருநூறுக்குள்
பாசித்த தேவியுட பூசைசொன்னேன்
பரிவான கொங்கணரப் படியேசொன்னூர்
ஆசித்த பூசையிது கிரிகைபூசை
அறிந்தபின்பு யிப்பூசை அகண்டம்பாரே. (89)

## இடகலை சந்திர பூசை.

அண்டமென்ற பேரண்டம் சித்தண்டமெல்லாம்
அளந்துவிட்டேன் மவுனத்தா லாராய்ந்துபார்த்து
பிண்டமெண்ட பஞ்சபூ தத்தினாலே
பிரிதியென்ன தொக்குடம்பு மலஞ்செவ்வையானுள்
சண்டனென்ற தூதாக்கள் சளுகையென்ன
சாதகமாய் வாதபித்த சிலேற்பனத்தால்
கொண்டதென்ன இடகலையே காலன்காலன்
குறிப்பான மவுத்தால் மாண்டார்பாரே. (90)

பாருநீ மவுனசத்தி மவுனவாலே
பஞ்சசத்தி தீக்ஷையொடு வாசிமூலம்
பாருநீ சந்திரகலை பூரணையினன்று
பதினாறு கலையுமொன்றாய்ச் சூரியன்போல்
பாருநீ பின்கலையி லிருத்தியூது
பளிச்சென்று மேல்வாச லூடுதாக்கு
பாருநீ விழிரெண்டும் யிமையொட்டிப்பார்
பகலவனுஞ் சந்திரனும் பாருபாரே. (91)

பாருநீ சூரியனைப் பூசைபண்ண
பன்னிரண்டு மொன்றான பருவங்காணும்
காருநீ பின்கலையில் பன்னிரண்டு
கருவதுவாம் ஓங் அவ்வும் நமசிவய வென்ன
சேருநீ சூரியதே வாயநமவென்று
செப்புவாய் ஓம் யவ்வும்நமவசியமென்ன
கூருநீ சந்திரதேவாய நமசிவயவென்று
குகைவாச லூடுபோய் நின்றுதாக்கே. (92)

தாக்குநீ ரவிமதியுந் தானேதோன்றும்
சகலமெல்லா மாகிருஷ்ண மாமுச்சாடணம்
நோக்குவது கும்பகமாம் தம்பிதம்பி
நோயெல்லா முச்சாடல் வேர்வைநீராய்
போக்குவது சஞ்சிதத்தைப் பூரணந்தான்வசியம்
போதகமாந் தமரிலே பேதனமேதாக்கு
ஆக்குவது மோகனமாந் தேவிதேவி
ஆதியாஞ் சிறுபெண்போல் வருவாள்காணே. (93)

காணவே ஆங்காரம் வித்வேசிக்கும்
காந்தியென்றால் ரவிகோடி மதிதான்கோடி
பூணவே மன்மதனை நெற்றிக்கண்ணால்
பூட்டியே மாரணஞ்செய் மேலேரேசி
தோணவே யாங்கார மாண்டுபோச்சு
சூரரொடு அசுரரெல்லா மாண்டுபோச்சு
காணவே மவுனத்திற் சுழினைவாசி
நாடியே சண்முகனைத் தியானஞ்செய்யே. (94)

தியானத்தால் நிருவிகற்பஞ் சமாதிமூட்டி
திருட்டிக்கும் பிரமநிட்டை செயமாங்காலம்
மயானத்தால் சுடுகாடு நோயெல்லாம்போம்
மயிலான சூரன்மேல் மடக்கியேறும்
வியானந்தால் வேல்பிடித்துக் கடைக்கண்மேவி
விடுகோழிக் கொடிநாட்டி விருதுகூறி
பயானத்த சத்துருமா ரணங்களாச்சு
படையெடுத்த வல்லபையாள் பரிசுகேடே. (95)

பரிசுகெட்ட யோனிவாய்க் கணேசன் தும்பி
பாய்ச்சியே கரிகரணம் வலஞ்சுத்தாட்டி
திரிதிகரம் கரநியாசம் கொண்டாளாகி
க்ஷணநேரம் பிரியாமல் மோகங்கொண்டாள்
வரிசையந்த வல்லபையுங் கணேசனுமேகூடி
மருவியதோர் சுகங்கொண்டாள் குண்டலிக்குள்ளானுள்
பிரிசமுற்றுல் சத்திகண பதியுமானுள்
பேரணியாய்ச் சுப்பிரமணியன் பின்செய்தானே. (96)

தானென்ற யுகமூன்றில் அசுராள்கூட்டஞ்
சங்காரஞ் செய்துவிட்டார் விஷ்ணுமூர்த்தி
மானென்ற பெண்மாய்கை உலகஆசை
மாண்டிடவே மனங்கொண்டு ஒருமையாக்கி
கானென்ற பெரும்பாதை மகாரத்தாலே
கலங்கினுர் பெரியோர்கள் சித்தரெல்லாம்
ஊனென்ற மந்திரத்தை யுறவுசெய்து
ஓமுடிந்தார் சூரரெல்லா மூர்த்திகாணே. (97)

காணப்பா தத்துவந்தான் தொண்ணூற்ருறு
கண்டதிலே அசுரர்தத்துவம் அறுபதும்பாழாச்சு
ஊணப்பா தேவதத்துவ முப்பத்தாறும்
உரைத்துதடா மவுனத்தி லூதும்போது
தோணப்பா ரசபற்பம் சமாதிமூட்டு
சொற்பெரிய வரையாறுந் தொடர்ந்துயேறும்
வீணப்பா தீட்சைவிட்டால் விழலாய்ப்போகும்
வேதாந்த சற்குருபதத்தை மேவிக்கேளே. (98)

## குருபூசை.

கேளுநீ குருபூசை மார்க்கஞ்சொல்வேன்
கெடியான சத்திபிடை சுழிணைமீதில்
ஆளுநீ குருவினுட விந்துநாதம்
அண்டரண்ட சிவாநந்தி வாசியோகி
தாளுநீ பதம்போற்றி விந்துநாதம்
சன்னிய தானத்தில் மனமேசெல்ல
காளுநீ அறிவோடே கட்டியேறி
நன்குருவே சற்குருவே யென்றுபோற்றே. (99)

போற்றியவர் தன்னிருகா லிடைபின்னுகப்
பூரணமாம் நந்திகுரு வொளியாய்க்காணும்
தேற்றியே ஓம் அங் உங் சிவயநமவென்று
செப்பியே குருமூர்த்தி தேவாயநமவென்றுமாறி
சாற்றியே பூசைசெய்வா யுபசாரங்கள்
சதுராக மானதமா மவுனத்தூணி
சோற்றியமே வாராமல் தொண்டுபண்ணு
சொற்குருவா மவுனத்தைச் சொல்வோங்காணே. (100)

சொல்லாத மவுனத்தைச் சொல்வோனுசான்
தொல்புவியிற் காரியகுரு ஆசானல்ல
யெல்லாத புரியட்டங் கண்டந்தன்னில்
இதமாக யிருத்தியே யூதும்போது
சொல்லாத பூரணந்தா னுலுமேலாய்ச்
சென்றேறும் பரமட்டுங் கொண்டுதாக்கி
மல்லாதே ராசகுரு சற்குருவாய்வந்து
மவுனத்தை வைத்திட்டால் மனமொன்றுமே. (101)

ஒன்றான மனமல்லோ சற்குருவின்பூசை
ஒருகோடி தவஞ்செய்வோர் தமக்குவாய்க்கும்
நன்றான ஆத்துமதத்துவ மிருபத்துநாலும்
நலமான குருவுக்குத் தோற்றப்பண்ணும்
சென்றாடும் வாசியிலே சின்மயத்தில்
தேஷிதாய் மனங்குளிரப் பூசைபண்ணு
கன்றாமற் பின்கலையிற் பிதிர்சூட்சஞ்செய்வாய்
காரணமாம் நந்திகுரு வாகுங்காணே. (102)

நற் சீடன்.

குருவாக வந்துஉப தேசஞ்சொன்ன
குருமவுனங் குருசுழினை நோக்கஞ்சொன்ன
குருவல்லோ தியானிக்க உறுதியாகும்
குணத்திலே சற்புத்திரன் யென்றவாறு
குருநிறைபோல் மனச்சாய்கை பற்றுஞ்சீடன்
கோடிக்கு மேலாகச் சுகுர்தந்தானும்
குருவாய்த்தால் மவுனகுரு வாய்க்கவேணும்
குமாரனென்ற சற்புத்திரன் குணம்நன்றாமே. (103)

நன்றான சீடன்வந்து சேர்ந்தானானால்
நலமான மவுனத்தை முன்னேசொல்லு
ஒன்றான மனதுரைக்க வேதநூலை
யுரைசொல்லி அறிவுபெற வூணிச்சொல்லி
வின்றான கண்ணாடி மேவச்சொல்லு
மேலான குருபதத்தைப் பற்றச்சொல்லு
கன்றான குருவிருந்த யிடத்தைச்சொல்லி
காரணமாய் வித்தாலே மேல்வித்தாமே. (104)

வித்தென்ன தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
மேவியதோர் வித்தாச்சு ரவிமதியாக்கியால்
வித்தான வித்துள்ளே பதிபாசங்கள்
விளங்குமென்ற பொருளப்பா மெய்வேதமாச்சு
வித்தான விந்துவினா லாகாசந்தோன்றி
மீறுமிதில் கால்தோன்றி அதில்தீதோன்றி
வித்தான மகாரமதில் நீர்மண்ணாச்சு
விளங்குபுவி யாலாத்துமா பின்னேயாச்சே. (105)

ஆச்சப்பா பிள்ளையாண் பெண்ணுமாகி
யளவற்ற விடையற்றார் பிறப்புக்கோடி
வாச்சப்பா கதலிகுலை சாய்ந்தபின்பு
மகவாகக் கனிவெடுத்துப் பிறப்பேயாச்சு
மாச்சப்பா மனக்குரங்கு கொம்பிற்றாவி
வளர்ந்ததே செனனங்கள் கோடாகோடி
ஒச்சப்பா தோற்றமொடு யோனிகாலு
ஒங்காரப் பிரணவங்கள் அளவில்லாதே. (106)

அளவேது கரைகண்டோர் யாருமில்லை
ஆசையென்ற பொரிக்குரங்கா லளந்தசென்மம்
அளவேது தாபரங்கள் சங்கந்தொட்டு
அந்தந்த வித்தா லண்டமெல்லாமாச்சு
அளவேது தன்மாத்திரை பத்தினாலே
ஆதியந்த அடிமுடியுந் தெரியாதுசென்மம்
அளவேது பசுபதிபா சத்தினாட்டு
ஆறாப்பார் பாசக்கயிற்றை சித்தர்காணே. (107)

காணப்பா பிறவியது யேதுமில்லை
கரையில்லாப் பிறப்பிறப்பு யிதுதானென்ன
ஊணப்பா மவுனத்தை யுபதேசித்தால்
உரைக்கமன மாவதற்கு உண்மைசொல்லு
வீணப்பா சித்தாந்தம் பாராதேயென்னும்
வேதாந்த மெந்நாளும் விடாதேயென்னும்
பூணப்பா சிவயோக மவுனமூட்டி
பூட்டியே பிறப்பறுக்க வகையைச்சொல்லே. (108)

சொல்லியே மனந்தேறி உரைத்தாயானால்
தூலம்விட்டு சூட்சமதில் நிராதாரத்தில்
வில்லினா ணேற்றிகணை தொட்டாப்போல
மேவியே யிருவிழியும் சுழினைநோக்கு
அல்லியே படர்ந்தாப்போல் காலைத்தாக்கி
அண்டத்தின் அக்கினியால் சுட்டுநீற்றி
மெல்லவே யிந்திரிய விடையமெல்லாம்
வெட்டவெளி யாக்கியே விண்ணிலேறே. (109)

## சூரியயோகம்.

ஏறுமென்ற பங்குனிசித் திரையிரண்டில்
யிதமாக வுதையத்தில் ரவியைப்பாரு
தேருமடா கண்கூசி சாதிளமைவெய்யில்
தீர்க்கமாய்ப் பின்கலையிற் கண்மூடிப்பாரு
நூறுமடங் காய்அருணன் காந்திவீசும்
நுனியான சுழினையிலே உற்றுப்பாரு
பேறுதருஞ் சுழினையிலே கண்கெடாது
பேராக யின்னமொரு சேதிகேளே (110)

## சந்திர யோகம்.

கேளப்பா பூரணச்சந் திரனைநோக்கிக்
கெட்டியாய் நவமிமுதல் தொட்டுப்பாரு
ஆளப்பா யிடகலையிற் சுழினைநோக்கி
அண்டரண்டத் தீயெல்லா மகன்றுபோகும்
வாளப்பா தீபத்திற் சுழினைநோக்கி
மருவியங்கே பார்க்கையிலே ஒளிதான்வீசும்
நாளப்பா அறுபதுநாள் யிப்படியேபாரு
நலமான சாக்கிரத்தில் யேறலாமே. (111)

ஆமிந்த யிடகலையில் வங்கென் றுவாங்கி
அப்பனே சுழினையிலே கும்பித்தேநில்
தாமிந்தப் பின்கலையிற் சிங்குரேசி
சாதகமாய் வாசிகொண்டு தாக்கிப்பாரு
ஓமிந்த மூலத்திற் குண்டலித்தீசாடி
உயர்ந்தசத்தி யுறவாகும் வசியத்தாலே
நாமிந்த மோகனத்தால் மேலேபோற்றி
நாட்டுவாள் விந்துநிலை நாட்டுவாளே. (112)

## மேல்வாசல்

நாட்டுவாள் மேல்வாசல் மூலாதாரம்
நலமான ஓங் அங் உங் அவ்வுங்
கூட்டுவாள் மவுனமென்ற வாலைப்பெண்தான்
குண்டலிப்பெண் கணேசன் சத்தியாகி
காட்டுவாள் சித்தத்தின் பதவியாச்சு
கண்கண்ட சித்தாதி யென்றமூலம்
சூட்டுவாள் நகாரமென்ற பதியினுள்ளே
துடியான விந்துவிலே பிரமன்தானே. (113)

தானான ஓம் அவ்வு மாய்த்தொட்டு
சரஸ்பதி பிரகாச மறிவிதாச்சு
கானான வீணாதண் டுத்தமூலம்
கருதியப்பா சுத்தவெண்மை யாகத்தோணும்
மானான உந்தியிலே பிறைக்குள்ளாக
வாழுகின்ற அம் நம யவசியென்றோது
கோனான பிரமதிஷ்டி சித்தியாச்சு
குரங்கான மனம்பிலக்கும் மாய்கைபோமே. (114)

போமப்பா மால்சீதை மனத்துள்ளாக
பூரணத்திற் பற்றமற் செய்யுங்கோடி
தாமப்பா ஒழிந்துபோம் சூட்சஞ்சொன்னேன்
சதுராக விசித்திவழி ஓம்நமசிவய
ஓமப்பா ஓம்நமோ மயேசன்தானும்
ஒளியான தீக்காட்டி லூணிப்பார்த்து
ஆமப்பா கால்மாறி யாடுங்கூத்து
ஆதித்தன் மண்டலத்தி லறிந்துபோற்றே. (115)

அறிவாலே மனமாளும் அடியில்நின்று
ஆதிஓம் சிவயநம சிங்குரேசி
குறியான அக்கினியில் அங்சங்கென்று
கூர்ங்ஹ்ரீ நோக்கையிலே சூரியன்போல்வட்டம்
நெறியாகத் தோணுமங்கே பலரூபந்தான்
நீதியாய் வேதமென்ற நாலுக்கேரு
பிரியாதே மவுனத்தி லிருந்துகொண்டு
பேரான மனோன்மணியில் அங்கென்றோதே. (116)

அங்கென்ற நால்வேதம் பூரணத்தை
ஆகாச மேலேற்றிக் குகையிற்செல்லு
சிங்கென்ற ஒளிதானே அங்கியாலே
தீக்காடு சுடாதார நிராதாரத்திற்
சங்கென்று மேலோடி விந்துக்குள்ளாய்
சாதகமாய் சுழிமுனைபத்தி விட்டகாடு
மங்கென்ற மவுனமப்பா மவுனவாலை
மகத்தான சித்தர்களும் சொல்லார்பாரே. (117)

வான் பொருள்

சொல்லாத வான்பொருள்தான் வெளியாய்க்காணும்
சுகாதீத லாடவிழி யிருகண்ணாட்டி
கொல்லாதே கொல்லுமடா சிவாயமென்று
கூறியே மேல்வாசல் கும்பிக்குங்காலை
மல்லாதே வாசியிடை மூக்குநுனிதோண
வளமாகும் ஓம்வங்கு யென்றுவூணு
கல்லாதும் உன்தேகம் பொன்னாம்பின்பு
கைலாச தேகமா மவுனத்தாலே. (118)

கைலாச தேகம்.

மவுனத்தால் மானதமே பூசைபூசை
வளமான சுழிமுனையி லுள்ளமுள்ளல்
மவுனத்தால் புரியட்ட மாளுமாளும்
மயேசனுட அடியில்நின்று வயநமசியென்று
மவுனத்தால் ஓமென்ற வழியிற்செல்லு
வளமாக அங்கென்று தன்னைப்பாரு
மவுனத்தால் தன்ரூபம் கண்ணாடிக்குள்
வாசமாய்த் தெர்சனையாம் மறைப்பில்லாதே. (119

மறையாது வெளியாகும் கற்பூரதீபம்
மருவிநின்ற நிருவிகற்பஞ் சமாதிமூலம்
குறையாது குகைவாசல் நாடியெல்லாம்
குலைந்துபோம் சதையடைப்பு நீராய்த்தள்ளும்
முறையாது காலாலே ஊதுஊது
உற்றுப்பார் மனக்கண்ணால் விகாரந்தோணும்
மறையான மேல்வாசல் நம்மிடத்தில்
லாந்தியடி யத்தித்தீக் காடுதானே. (120)

மவுனம்.

தானென்ற அகாரமாம் உகாரங்கூட்டில்
சாதகமாய்ச் சமரசமாய் மவுனமாச்சு
கோனென்ற பூரணச்சந் திரனைப்போல
கூர்மையாய் யொளிவீசும் கண்தான்கூசும்
தேனென்ற அமுர்தமது உதரம்பாயும்
தேகசித்தி யனந்தகற்ப காலங்கூட்டி
பானென்ற ராப்பகல்பொழுதாம் சமாதியாலே
பஞ்சகண தத்துவந்தான் பாலாய்ச்செண்ணே. (121)

பாழான மனத்தாலே கெட்டுப்போனார்
பாய்ந்தபிண மாய்ப்போனு லென்னசெய்வோம்
கோளான சீடரைக்கை யணைக்கவேண்டாம்
குருநிலையிற் பத்தம்வைக்கக் கண்ணேறுது
தேளான கற்பமிவன் கோடிகாலம்
தின்றாலும் நல்லபுத்தி வாராதையா
ஊழான ஊழ்வந்தால் தானேதாக்கும்
உற்றுப்பார் சற்குணத்தோன் மவுனியாமே. (122)

ஆமப்பா புருவமையம் சாக்கிரபீடம்
ஆக்கினையாம் ஆகாசத் தோத்திரமாகும்
தாமப்பா பூரணத்தை உள்ளேயேற்றத்
தாரணையாய்ப் பிரணவத்தின் வசியமென்று
ஓமப்பா ஓம்சிவய நமசியென்று
உற்றுப்பா ரிடகலையை மாறிப்பாரு
சோமப்பா லூணிவிக்குந் தில்லையூரிற்
சேர்க்கலாம் பூரணமுஞ் சுத்தலாமே. (123)

சுத்தலாம் நமபட்டம் மவுனத்தாலே
சுழல்காற்றின் துரும்பதுபோல் சுற்றியென்றும்
பத்தலாந் தீபவொளி வெளிச்சத்தாலே
பளிங்குபோல் பவளம்போல் விந்துநாதம்
முத்தலாம் விந்துக்குள் ளோடாதப்பா
மூர்க்கமாய்ச் சையோகஞ் செய்யில்மேலாம்
தத்தலாஞ் சச்சிதா னந்தத்தப்பா
தண்டமென்றால் மேருக்கு ளடக்கந்தானே. (124)

அடுக்கடுக்காய் வரையேறி யாடவென்றால்
ஆகியடி வழலைபினல் விந்துநாதம்
குடுக்கவே குருவழலை துரிசைக்கொல்லும்
கூர்ப்பான பரிகற்பம் குருவாய்நிற்கும்
முடுக்காக சூதபற்பம் முறையாய்ச்செய்வாய்
மூந்தவே பிரமநிட்டைக் கிதுவேகற்பம்
உடுக்கமாய் மேல்வாச லேறுங்காலை
யூடறுத்து யேற்றுவிக்கும் விந்தைக்கட்டே. (125)

விந்துகட்டப் பூரணமும் மேலேயேற்று
மெய்யான புரியட்டம் தொக்கில்நிற்கும்
இந்திரிய விடயத்துள் மனம்பாயாது
யிடைமிஞ்சிப் பாய்ந்தாலும் பிறவியில்லை
அந்தரங்கத் திரிகரண மாண்டதாலே
ஆகாச வெளிமேலாய் வறைமேற்செல்லு
தெந்தமா யேறுதற்குச் சூதகற்பம்
துடியாலே ஒருநாளுஞ் சாகார்பாரே. (126)

சாகாம லிருந்தாக்கா லவனேசித்தன்
சச்சிதா னந்தகுரு புத்திரனுகும்
ஆகாமி யஞ்சஞ்சி தத்தேயோடு
அடங்குமே பிராரத்துவ மப்பாகேளு
போகாத வாசனையு மெங்கேபோச்சு
பொறிபோச்சு புலன்போச்சு பூதம்போச்சு
ஏகாந்த கைலாச சபையிற்சென்று
யிருக்கையிலே ஆறுவரை யேறிச்செல்லே. (127)

### யோகாதனம்.

சொல்லவே நாதாந்த மேலேயேறச்
 செப்பினேன் மவுனத்தால் வாசித்தம்பி
மெல்லவே வலக்காலை யிடக்குரங்கிலேற்றி
 இதமாக யிடக்காலை வலக்குரங்கிலேற்றி
வல்லலே கரத்தாலே கால்விரலைக்கூட்டி
 வாசியெங்கும் பாயாமல் மனவுந்தாக்கி
அல்லவே முதற்சாமத் திருந்துகொண்டு
 அசையாமல் பூசித்துக் கும்பிரேசி. (128)

கும்பித்து ரேசிக்கப் பன்னிரண்டுங்கும்பிக்
 கொண்டேறும் பூரணமுங் குலுங்கும்பாரு
தம்பித்துத் தலங்தோன்றும் வாசியேற்றத்
 தவிடுபொடி யாகவே சண்ணுஞ்சண்ணும்
கம்பித்துக் கொல்லாமல் பூரணையைத்தொட்டுக்
 கண்டத்தே யிருத்தியங்கே கருதியூது
தும்பிக்கை போலவிழும் அமுர்தந்தானும்
 துடியான பித்தத்தை யிருத்துவாறே. (129)

### ஈசன் குருவாய் வருவது.

வாறாக அரூபமே சொரூபமாக
 மவுனநந்தி பிரகாச மொளிக்குள்ளாகக்
கூறாகக் குருமவுனங் குருநாதன்தான்
 கூத்தான அம்பலத்தில் மாறியாடி
வேறாக உபதேசம் குருபோல்வந்து
 வெளிவெளிக்குள் வார்த்தைசொல்வார் வேணசித்தி
ஆறாகப் பெருகுமடா அஷ்டகர்மம்
 அப்பனே வாய்ப்பேச்சா லறையலாமே (130)

ஆமப்பா குருவுக்குத் திரிநேத்திரங்கள்
 அப்பனே காளகண்ட மான்மழுவினோடு
தாமப்பா புலித்தோலா லாடைசாத்தி
 தந்தியுட தோல்போற்றிக் கண்டந்தன்னில்
வாமப்பா அரவணிந்து விபூதிசாத்தி
 மாதுசிவ காமியொரு பாகராகி
ஓமப்பா ரிஷபவா கனத்திலேறி
 இச்சைபெறச் சொரூபசித்தி கொடுத்தாழ்வாரே. (131)

ஆழுவார் கும்பித்துக் கால்மேலேறி
அங்கையிலே கபாலத்தி னேடுமேந்தி
வாழுவார் சத்தியுடன் மாறியாடி
மாய்கைதட்டி மறுவரையி லேறுங்காலே
சூழுவார் தீய்மூட்டிச் சுடுகாடாக்கிச்
சுத்தவெளி யாக்கியே வறைமூன்றிற்போய்
கோளுமே வாராமல் குளிகையாலே
கொண்டேறி நால்வறையிற் குறியைக்கேளே. (132)

## தசநாதம்.

குறியேது மவுனசிவ குருதானேது
கொண்டேறி மேல்கடந்த அறிவங்கேது
நெறியேது வாசியுட நிலையங்கேது
நேரான நாதமொடு விந்துவேது
வெறியேது லகிரிகொண்ட வீரங்கேது
மேலான காலோடு தீயுங்கூட்டி
பிறியாதே ஐவரைக்குள் ளேறும்போதம்
பேச்சேது மூச்சேது பிரியொட்டாதே. (133)

ஒட்டாது சுழற்காற்றுத் தீயுங்கூடி
ஒளிகோடி மதிகோடி ரவிதான்கோடி
கொட்டேது யிடிமுழக்க மேகநாதங்
கூறுவலம் புரிநாத மணியினேசை
விட்டேது காதடைக்குங் கண்ணும்புக்கும்
மேலேற்றத் தெரியாது விழியுங்காணும்
மட்டேது நடனவொலி சிலம்பினேசை
மாட்டியே வாங்குமப்போ மயக்கந்தானே. (134)

தானன ஆறுவரைக் குள்ளேசிக்கித்
தானிருக்கச் சிலம்பொலிதா னென்னசொல்வேன்
கோனன ரசகுளிகை மேலேவாங்கு
கும்பித்து யிடக்காலே மாறியாடிக்
கானன நடனவொலி கற்பமூன்றிற்
காலரசக் குளிகைகொண்டு வந்துதப்பா
தேனன கொங்கணர்தான் பட்டபாடு
செப்பினு ரதிசயத்தின் திறந்தானன்றே. (135)

## கொங்கணர் பெருமை.

திறமான கொங்கணர்போ லாருமில்லை
செகத்திலே யிப்படித்தா னுண்டோபிள்ளை
உறமான செய்தியெல்லாம் பார்த்துவந்தார்
ஒவ்வொரு நாலாக யிருக்கமுத்தி
அறமான தவஞ்செய்தான் சட்டமுனிமெய்க்க
அவன்பிதா போகர்மெய்க்க காலாங்கிமெய்க்க
நிறமான திருமூலர் தேவர்மெய்க்க
நித்திரைபோல் மூன்றுகற்பஞ் சமாதிகாணே. (136)

காலான ருத்திரனும் மயேஸ்பரனுங்கூடிக்
கருவான விந்துவிலே மனஞ்செவ்வாக்கி
மேலான குகைவாசற் கப்பால்சென்று
விந்துக்கு நாதவிட்டு மப்பாலேறி
மாலான பூரணமாஞ் சமாதிமூட்டு
வணங்கினன் சொரூபமணிக் குளிகையாலே
நாலான பூரணமு மவனேயாச்சு
நாட்டிலுள்ள சித்தர்கட்குக் கீர்த்தியாச்சே. (137)

## சித்தர் பூசை.

ஆச்சிந்த விந்துவிலே போகர்பூசை
அப்பனே சுழிமுனையிற் காலாங்கிபூசை
வாச்சிந்த மேல்வாசல் திருமூலர்பூசை
வளமான லலாடத்தில் யெக்தனுக்குப்பூசை
பூச்சிந்த நால்வரையிற் சின்மயத்தின்பூசை
பேரான ஐவரையிற் கொங்கணர்தன்பூசை
பேச்சிந்த நவசித்தாள் மூவரையிற்பூசை
பிரபலமாய்ப் பூசித்தோர் சித்தராமே. (138)

சித்தமே ஆதியிலே சேர்ந்தமூலஞ்
சித்தாதி நாமமென்ற பேருமாச்சு
பத்தமென்ற பூசைபண்ண ஓம்அங்உங்கென்னப்
பாசமாய் அங் சங்கென் றோதமூலம்
சத்தாதி யவரவர்தன் மூலபீசஞ்
சாத்தியந்தான் வாராமல் வட்டத்தூணும்
பெத்தபே ரிப்படியே லெபிக்கும்பேரு
பதறாதே பூசைவிதி பெலக்கச்செய்யே. (139)

## ரசலிங்க பூசை.

செய்யப்பா ரசகுளிகை யீவார்சொன்னேன்
திறமாகச் சமாதியுட மூட்டுஞ்சொல்வார்
பய்யப்பா ரசலிங்கம் பூசைபண்ணு
பார்க்கையிலே சத்துருக்க ளசுராள்மாய்கை
பெய்யப்பா யெழுதோற்றம் நால்யோனிக்குள்
ளெழும்பியதோர் சத்துருக்கள் நாலுமாகும்
பொய்யப்பா சொல்லவில்லை மானதமாய்ப்பண்ணு
புத்தியிலே விவேகமுறப் பூட்டுபூட்டே. (140)

பூட்டியதோர் மேல்வாசல் பூட்டுப்பேரும்
புரியட்டம் பூரணமு மொக்கயேறும்
ஆட்டியதோர் ஆட்டெல்லா மஞ்சுழினையாட்டு
அப்பனே புலத்தியனே மவுனத்தாட்டு
மூட்டியதோர் தீய்மூட்டுங் காலினட்டு
முத்தமனே யறிவோடே சேர்ந்தவாட்டு
காட்டியதோர் கண்ணாட்டும் லாடத்தாட்டுங்
கற்பமென்ற ரசகற்பத் தாட்டுத்தானே. (141)

## சீடனுக்கு உபதேசிக்கும் முறை.

தானான சீடனுக்கு உபதேசிக்கிற்
சடாதார மவுனத்தை முன்னேசொல்லி
கானான சாபத்தி னிவர்த்திசொல்லி
கண்டுபார் பின்பங்கே அட்டாங்கஞ்சொல்
கோனான சிவயோக மனுட்டானஞ்சொல்
கொத்தடிமை யானுக்கால் வாசிசொல்லு
வானான நிராதார மவுனஞ்சொல்லு
மானதமாம் பூசையிது கருவைச்சொல்லே. (142)

சொல்லவே புலத்தியனே வழுவாராமல்
தோணவே சிவதீட்சை பத்துஞ்சொல்லு
வெல்லவே தேவியுட தீட்சைபத்து
விளங்குவா ரதன்பிறகு மவுனவாலை
சொல்லவே மேல்வாசல் மூலஞ்சொல்லு
திடமாக விந்துநிலை நிலைக்கச்சொல்லு
அல்லவே சமாதியைந்து மடைவாய்ச்சொல்லு
அப்பாற்பின் பூரண சமாதிக்கேற்றே. (143)

ஏற்றவே சற்புத்திர ஞானுற்சொல்வேன்
இடையிலே தவறுபுத்தி விவேகங்கெட்டால்
காட்டிலே தாத்திவிட்ட பூனையைப்போற்
கைமுறைகள் காட்டாதே கருச்சொல்லாதே
நீற்ருற்றும் வழலேமுறை தனைக்காட்டாதே
நினைவுகெட்ட மாந்தரைநீ நீங்கத்தள்ளு
பாற்ருற்றுஞ் சூத்திரனுஞ் சாதியானல்
பன்னிரெண்டு வருடம்வரை பார்த்துத்தேறே. (144)

## மூடர்கள்.

தேறவே சாயுட்சியஞ் சூத்திரனேஞானி
சித்தத்தில் களங்கமற்ற புத்தியாவான்
ஆறவே யடிபணிந்து கேட்டதெல்லாமீவான்
அல்லாதான் முதற்சாதி ஆசைகற்பம்
நாறவே உடலெடுத்த நாய்ச்சென்மங்கள்
நன்மைவரா தொருநாளும் பேசவேண்டாம்
மாறவே மனங்கொண்டாற் கனங்கொள்ளாது
மவுனத்தி லுரையாது மூடர்பாரே. (145)

மூடரென்ற மூதேவி காசுக்கள்ளன்
முழுதுமவன் வஞ்சகனொருசொல்லில்லை
கேடனென்ற சவங்களவன் சண்டிமாடு
கேடுள்ளான் மாபாவி மனோவிகாரி
சூடனென்ற பூச்சூடன் துன்மார்க்கந்தான்
சொற்பெரிய குருபாதந் தொண்டுபண்ணுன்
ஏடனென்ற யிறுமாப்பன் பாசக்கண்ணன்
யென்குருவே யென்ருெருநாள் பணிந்தியானே. (146)

ஈயாத கடுங்கோப லுத்தனுண்டு
இவர்களையும் பார்த்துப்பின் தீட்சையோது
வாயாற மனதாற ஒருமையாலே
மவுனத்தை வைத்தவனைக் கைக்கொள்வாய்நீ
தாயான பரைபூசை பண்ணப்பண்ணச்
சவித்திடான் சிதம்பரச்சக் கரத்தின்பூசை
நேயமாய்ச் செய்கையிலே அங்கநியாசம்
நீதியாய்க்காமகலைத் தியானஞ்செய்யே. (147)

## நவ நியாசம்

செய்யப்பா சத்தியுட நியாசந்தன்னைச்
சிறப்பான கரநியாசஞ் சிவநியாசம்
வையப்பா மாதுருகர நியாசந்தானும்
மகத்தான சோடச நியாசந்தானும்
மெய்யப்பா சடாதார நியாசந்தானும்
மேலான நிராகார நியாசந்தானும்
பொய்யப்பா யெண்ணுதே நவநியாசம்
பூட்டியே சிதம்பரத்தைப் பூசைபண்ணே. (148)

## நவமுத்திரை.

பண்ணவே பூசைக்கு முத்திரைகேளு
பண்பான தேனுமுத்திரை யோனிமுத்திரை
யென்னவே சின்மயமுத் திரையிஞேடு
இலகுசிவ லிங்கமுத்திரை கும்பமுத்திரை
உண்ணவே பிறைமுத்திரை ரவியின்முத்திரை
உறைகின்ற நாதமுத்திரை விந்துமுத்திரை
கண்ணவே நவமுத்திரை செய்துபூசை
கலமான ஓமங்கள் தற்பனங்கள்செய்யே. (149)

## தீட்சைவிதி.

செய்யடா அங்குட்டம் திக்குப்பந்தம்
திரிகோண விந்துள்ளாய்க் கலசந்தோறும்
கையடா ஐந்துவகைப் பாத்திரத்துக்குக்
கருவான அவரவர்தம் மூலபீசம்
மெய்யடா பாணித்துப் புட்பம்வாங்கி
விளங்கவே யிடக்கரத்தில் வைத்துத்தம்பம்
வையடா அட்டபந்தம் அவரவர் தம்பீசம்
வளமாகத் தியானித்து மவுனந்தாக்கே. (150)

தாக்கியே மவுனத்தாற் சத்திபூசை
சமத்தான மேருவைப்போல் பார்த்துக்கொண்டு
ஆக்கியே மானதமாம் அட்சரங்கள்
ஆதியாஞ் சிவதீட்சை சத்திதீட்சை
நோக்கியே சடாதாரத் தசவைபீசம்
நுனியறிந்து இதழ்தோறும் போடுபோடு
தேக்கியே பரைதீட்சை மவுனதீட்சை
திறமாகச் சமாதியிலுந் தீட்சைநாட்டே, (151)

நாட்டியே பெலிபீடம் நந்திபீடம்
நகிளாதே கொடிக்கம்பத் துவாரபாலாள்
பூட்டியே அட்டகெஜ அட்டநாகம்
போடுவாய் பீசங்கள் அட்டசத்தி
சூட்டியே அட்டதுர்க்கி அட்டபாலாள்
துடியான கிரீடியொடு பிருங்கிவெய்யோன்
மூட்டியே வடமுகத்திற் காளிதானும்
முறைவிதம் வயிரவற்குப் பீசம்போடே. (152)

போடுவாய் வீரபத்திரன் கணேசன்கந்தன்
புகழான மேல்முகத்திற் பீசந்தானும்
நாடுவாய் சண்டிகேசன் தட்சணாமூர்த்தி
நலமாக விந்திட்டு மூலபீசம்
கூடுவாய் மவுனத்தில் அங்கங்கேதான்
கூராகத் தியானித்துச் சமாதிமூட்டு
தேடுவாய் குருதியானம் நந்திமுன்பே
தேடியே கணபதியைத் தியானம்பண்ணே. (153)

தியானமாம் பூரண சமாதிமூட்டித்
திடமான யிடகலையில் வாசியேற்றி
தியானமாம் அவரவற்கே மவுனமூட்டி
சிந்தைபல நினைவுவிட்டு மானதத்தில்
தியானமாய்ப் பூசைசெய்வாய் கருணைகூறத்
தெளிந்தமன தொருமையினல் தம்பம்செய்து
தியானமே புரிவாய்பின் தேவிபூசை
திறமான பாத்திரங்கள் முன்னேவையே. (154)

## தேவி பூசை மார்க்கம்.

வைத்திட்ட பாத்திரத்தை முன்னேபூசி
வளமாகச் சத்தியுட பூசைமார்க்கம்
மெய்த்திட்ட மென்னசொல்வேன் நவநியாசம்
மேலான நவமுத்திரை அபிஷேகங்கள்
கைத்திட்ட மறவாதே நெய்வேத்தியங்கள்
கட்டாகச் சோடசமா முபசாரங்கள்
செய்திட்டு மணியோசை சங்குநாதஞ்
செயகண்டி யோசையுடன் தோத்திரஞ்செய்யே. (155)

## மடையர் பூசை.

செய்யப்பா யிப்படியே மானதமாம்பூசை
திறமான மவுனத்தால் முத்தியாச்சு
மெய்யப்பா சிவயோகி சித்தர்பூசை
மேதினியில் வஸ்துகஞ்சா அபின்சாக்கு
வையப்பா வென்றுசொல்லிக் கிரிகைபூசை
மனம்போன பெண்பூசை மார்க்கஞ்செய்வார்
தையப்பா சித்தமிதாம் பூசையென்பார்
சையோகம் செய்வார்கள் மடையர்தானே. (156)

மடையரைப்போல் பூசைசெய்து பெண்ணைச்சேர்ந்து
மருவியே சாராய வெறிகள்மிஞ்சி
சடையாமல் வாய்குளறிச் சண்டையிட்டுத்
தாளிப்பா ரிப்பூசை தாய்க்கொவ்வாது
அடையாள மிதைக்கண்டு தேவிபார்த்து
ஆகாகா நரகத்திற் போடச்சொல்வாள்
விடையாதே கிரிகையிலே பூசைபண்ண
வேதாந்தத் தீட்சையிரு நூறும்பாரே. (157)

இருநூறிற் சொன்னபடி கொங்கணருஞ்சொன்னார்
யியல்பறிந்து கிரிகையிலே பூசைபண்ணு
ஒருநூறில் ஞானவழி உண்மைசொன்னேன்
உற்றுணர்ந்து சிவக்கியானம் நன்றாய்ப்பாரு
அருமையாய்த் திருமூலர் திருமந்திரம்பாரு
அடிப்படையிற் பெலன்போட்டு வந்தத்தேற
ஒருமையாய் மனங்கொண்டு உண்மையாக
உரைத்திட்டார் ஐந்நூறும் ஞானம்பாரே. (158)

## சட்டைமுனி 200 பார்க்க

பாரப்பா சட்டைமுனி பாடலுக்குள்
பண்பான ஞானமிரு நூறும்பாரு
சேரப்பா சாயுட்சியங் கட்டியேறத்
தெளிவாகும் மனதுக்குள் தெளிவுண்டாகும்
காரப்பா குருபதத்தைக் கார்த்தால்சித்தம்
கருணைசெய்வார் பன்னிரெண்டு வருடங்காரு
ஊரப்பா யிருப்பார்கள் கோடிக்கொன்றாய்
உற்றுப்பார் அவர்களைநீ கண்டுபாரே. (159)

பேசையிலே அட்டாங்க மாறுகிறதைக்கேளு
பேரான சிதம்பரத்தின் பூசைகேளு
ஆசையிலே சத்தியுட தீட்சைகேளு
அப்பனே வாசியுட கருவைக்கேளு
பாசையிலே பரிபாசை மெத்தவுண்டு
பாசாங்கு மெத்தவுண்டு ஒருமனதாய்ப்பேசி
பூசையிலே சிவபூசை தேவிபூசை
புகழாகக் கைமூறையாய் நியாசங்கேளே. (160)

## அங்க நியாசம்.

கேளுநீ யங்கயத்தி னியாசந்தன்னைக்
கேசரியோ கந்தனிலே குறிகள்சொல்வேன்
ஆளுநீ அங்குட்ட விரலைத்தானே
அனுமிகையின் நடுவரையி லூன்றிமேலாய்
கோளுநீ வாராமல் மவுனத்தப்பா
குறிநாட்டு வாயிருகண் சத்தநேரம்
வாளுநீ புருவமைய முச்சிதானும்
மார்பிடரிச் சுழியினி லூணுவூணே. (161)

## கர நியாசம்.

ஊணவே விரலிரண்டும் உந்திமுட்டு
ஒகோகோ பதமிரண்டு மாறியேற்று
தோணவே கரநியாசம் சொல்லக்கேளு
சொல்லுகிறேன் மவுனத்தா லிரண்டுகையும்
பூணவே அங்குட்ட விரலினாலே
பூட்டுவாய் விரலுஞ்சாத் தியங்கொண்டோது
காணவே காமகளி னியாசங்கேளு
கருவாகு மிருவிரலு மொன்றாய்க்கூட்டே. (162)

## காமகள் நியாசம். 3 சத்தி நியாசம். 4

கூட்டியே புருவமையர் தன்னிலூணு
கூறுதற்கு மவுனதம்பம் அங் சங்கென்று
நாட்டியே சடாதார மாறுமூணு
நலமாக உச்சியிலே பதித்தபின்பு
சூட்டியே சத்தியுட னியாசஞ்சொல்வேன்
சுத்தமாய் ஓம் அவ்வுங் கிலியுஞ்சவ்வும்
பூட்டியே சிவயவென்று வாமபாகம்
புகழாக மவுனதம்பம் பூணவோதே. (163)

## சிவ நியாசம்.

ஓதுவாய் தம்பனத்தால் மவுனத்தாலே
உற்றதொரு சிவநியாச முறைக்கக்கேளு
ஓதுவாய் வலப்புரத்தே யொருபக்கஞ்சார்
உச்சிதொட்டு வலக்கண்ணும் வலச்செவியுமூணு
ஓதுவாய் வலதுபுயம் வலதுமார்பு
உருவாக வலதுவிரல் வலதுமூட்டு
ஓதுவாய் வலதுபதஞ் சிவநியாசமாச்சு
உத்தமனே சத்திக்கு மிடப்புரத்தேயூணே. (164)

## சோடச நியாசம்.

இடப்புரந்தா னிவ்வண்ணஞ் சத்தியாச்சு
இனிமேற்கேள் சோடச நியாசந்தன்னை
திடப்படவே கனுஷ்டிகைமே லங்குட்டத்தைச்
சிறப்பாக மேலேற்றி மூவிரலுமொன்றாய்
படப்படவே உச்சிதனிலே ரம்மென்றும்
பாங்கான நெற்றியினிலே ராம்மென்றும்
கெடப்படுமோ புருவமையந் தனில்ரிம்மென்றும்
கிழாகும் சுழினையிலே ரீமென்றானே. (165)

ஊணுவா யசனையிலே ரும்மென்றாணு
ஒளிமீறுங் குண்டலியில் ரூம்மென்றாணு
தாணுவாய் நாடியிலே ரெம்மென்றாணு
தருகண்டத் தடிதனிலே ரேம்மென்றாணு
பூணுவாய் நெஞ்சினிலே ரொம்மென்றாணு
போதமா மூக்கியிலே ரோம்மென்றாணு
நாணுவாய் உம்மென்றும் லம்மென்றுந்தான்
காட்டுவாய் விரலிரண்டு நாடிக்காட்டே. (166)

## சடாதார நியாசம். 7

காட்டுவாய் லாம்மென்றும் லிம்மென்றுந்தான்
கடியபிற முட்டியிலே கருவாயூணு
ஓட்டுவாய் லும்மென்றும் லூம்மென்றுந்தான்
உண்மையாய்ப் பாதத்தில் ஊணுவூணு
கோட்டுவாய் சோடசத்தின் நியாசமாச்சு
குறியான சடாதார நியாசங்கேளு
தீட்டுவாய் ஓம்கமசி வயமென்று
செப்பியே தர்ச்சனையும் மத்திமையுங்கூட்டே. (167)

## நிராதார நியாசம்.

கூட்டியே யங்குட்ட விரலைச்சேர்த்துக்
கூராக அவரவர்தம் மூலமூணு
சூட்டியே சடாதார நிராதாரத்திற்
சோதிபெற நியாசத்தைச் சொன்னேனையா
மேட்டியாய் நூல்பார்த்து நியாசமெல்லாம்
வீறாக நமக்குவரு மென்றுதானே
நாட்டிலே யிப்படியே நமக்குவருமென்று
நாட்டாதே குருவறிந்து கேளுந்தானே. (168)

## மாது கர நியாசம். 9

தானான நியாயசங்க ளூற்றுப்பார்த்துச்
சற்குருவைக் கேளாமல் நீசெய்யாதே
மோனமாய்க் கைமுறையாய்ச் சொல்லச்சொல்லு
மூவாயி ரம்பாட்டில் திருமந்திரத்தில்
தேனான மாதுகர நியாசஞ்சொன்னாள்
திடமாக அகாரமுதல் உகாரமட்டும்
கோனான அன்பத்தோ ரட்சரத்தைக்
கூறினார் குறிகாட்டிப் பஞ்சாட்சரங்காணே. (169)

காணுவாய் நவநியாசம் முறைதப்பாமற்
கைமுறையாய்ச் சொன்னேனா னேமசாந்தி
பூணுநீ கும்பத்திற் சக்கரத்திற்
பொன்னான விக்கிரகத்தில் மேருதன்னில்
தோணவே பூசைபண்ண நியாசஞ்சொன்னேன்
சுருதிபெற முத்திரைகள் சொல்வேன்கேளு
காணுநீ நவமுத்திரை யெண்பதுக்கும்
நன்றாகப் புலத்தியனே சொல்லக்கேளே. (170)

## நவமுத்திரை.

சொல்லுகிறேன் சின்மயத்தின் முத்திரையைக்கேளு
சூட்டுவாய் தர்ச்சனையு மங்குட்டந்தொட்டு
மல்லுகிறேன் வளையமா யிருவிரலுஞ்சேர்த்து
மற்றவிரல் மூன்றையுந்தா னிமிரநாட்டி
வெல்லுகிறேன் சின்மயத்தின் முத்திரையீதாச்சு
விளங்குகிறேன் தேனுமுத்திரைக் கெண்விரலுங்கூட்டி
சொல்லுகிறேன் விரல்மாறிற் காமதேனுந்
தேனுமுத்திரை நால்மூலை யாகப்பூட்டே. (171)

பூட்டுவாய் யோனிமுத்திரை சொல்லக்கேளு
பூணவே யிருகாத்தங் குட்டந்தன்னை
கூட்டுவாய் தர்ச்சனையும் மாறிச்சேர்த்துக்
கோர்த்துவிடு மற்றது விரலைப்பூட்டி
நாட்டுவா யிதுதானே யோனிமுத்திரை
நலமான லிங்கமுத்திரை சொல்லகேளு
மூட்டுவாய் இடகாத்தர்ச் சனையங்குட்டம்
முனைமையஞ் சின்மயமாம் போதத்துள்ளே. (172)

போதமுள்ள ஆவடையாள் வலக்காத்தங்குட்டம்
புகவிட்டுத் தர்ச்சனையு மிடக்காத்தின்மையம்
நாதமென்றால் ஆவுடையாள் நடனலிங்கம்
நலமான முத்திரையாம் புலத்தியனே அய்யா
வேதமென்றால் கும்பமுத் திரையைச்சொல்வேன்
விளங்கவே யிருகையுங் குவிப்பதுவேகும்பம்
வாதமென்ற பிறைமுத்திரை சொல்லகேளு
வளமான அங்குட்டந் தர்ச்சனியுந்தானே. (173)

தானான தனுவளைத்தார் பிறையுமாச்சு
சாதகமா யிருகாத்தங் குட்டங்கூட்டி
வேனான மத்திமையைக் கீழாய்ச்சேர்த்து
விளங்கியதோர் மற்றவிரல் கீழாய்ச்சேர்த்து
தேனான ரவியென்ற முத்திரையீதாச்சு
சிறப்பான நாதமுத்திரை செப்பக்கேளு
கோனான விரல்நான்கும் அங்குட்டந்தொட்டுக்
கூட்டிப்பார் நாதமுத்திரை யிதுதானாச்சே. (174)

ஆச்சிந்த விந்துமுத்திரை யறியச்சொல்வேன்
அங்கைரெண்டு விரல்பத்துங் கூட்டிச்சேர்க்க
வாச்சிந்த விரல்மாறி மாறியேற்ற
வளமான விந்தினுட முத்திரையீதாச்சு
பேச்சிந்த முத்திரையில் தேனுமுத்திரை
பிரதான யோனிமுத்திரை நாதமுந்திரை
மூச்சிந்தப் பிறைமுத்திரை நாலுங்கேளு
முத்தியுண்டாஞ் சித்தியுண்டாம் மூர்க்கமாமே. (175)

மூர்க்கமாஞ் சின்மயத்தின் முத்திரையினோடு
மோகமாம் லிங்கமுத்திரை கும்பமுத்திரை
பார்க்கநான் முத்திரையும் விந்துமுத்திரை
பாங்காக யிதுவைந்துஞ் சிதம்பரபூசைக்கு
தீர்க்கமாம் முத்திரையுண்டாம் மவுனத்தாலே
தேவிசிவ பூசையெல்லாம் சித்தியாகும்
மார்க்கமாய் மற்றதொரு பூசையெல்லாம்
வாசமாம் சின்மயத்தின் முத்திரையைக்காட்டே. (176)

காட்டுவா யோமயாக சாலைக்கெல்லாம்
கைமுறையாய் அட்டகும்பந் தனக்குப்பூசை
பூட்டுவாய் பிரதான கும்பத்துக்கும்
புகழான ஓமத்துக்கு சின்மயமுத்திரையும்
காட்டுவாய் மவுனத்தால் பூசைசெய்து
நலமான சீடனுக்குத் தீட்சையோது
மூட்டுவாய் மவுனமென்ற வாலைதீட்சை
முனைமையம் கண்பொருக்க மூட்டிடாயே. (177)

மூட்டியே நிராகாரப் பூசையுள்ளே
மோனமாய்த் தம்பனமாய் வாசிதன்னை
காட்டியே சுழிமுனையில் நாட்டம்நோக்கு
நதிகண்டால் வாசியொடு வாதஞ்சித்தி
பூட்டியே ஆகாமியஞ் சஞ்சிதத்தினோடு
பூணுகின்ற பிரார்த்தவத்தோ யத்தினோடு
சாட்டியமே வாராமல் உச்சாடித்துச்
சாத்திரமென் றுக்கினையிற் சண்ணுசண்ணே. (178)

சங்கமாண்டி.

சண்ணடா லோகத்திற் சங்கமாண்டி
சாதகமாய்ச் சித்தாதிக் குருநானேயென்பான்
விண்ணடா கந்திஒளி காட்டச்சொல்லு
விளங்கவே வாசியுட கருவைக்கேளு
கண்ணடா பற்றுவது யெங்கென்றுகேளு
கருவான விந்துநிலை சொல்லாவிட்டால்
மண்ணடா வாசியவன் வாயிற்போடு
மானிடவர் பாவமெல்லாம் வாங்குவானே. (179)

வாங்குவான் அவன்வயற்றுப் பிழைப்புக்காக
மக்களுடன் பெண்டாளும் மாபாவந்தான்
தாங்குவா னிப்படியே பாவக்காடாய்த்
தனக்குமோ ரிடமற்றுச் சவங்களாகி
ஓங்குவான் ஒருவயற்றுக் கஞ்சிக்காக
ஒருகோடி நாய்சென்மம் ஓடிஓடி
ஏங்குவா னிப்படியே தினங்கள்தோறும்
யிகத்திலே யிவன்பெற்ற பேறுகாணே. (180)

## ஞானி.

பேருக மவுனத்தே முத்திமுத்தி
பேரண்டஞ் சித்தண்டந் தேகஞ்சித்தி
கூருகச் சுழிமுனையில் நினைத்தால்பத்தி
கொண்டேறும் நிராகார ஒளிகள்பற்றி
நேராக ரவிமதியை யுற்றுப்பார்த்து
நெய்யோடு கரிசாலை நிமைக்குள்ளாக
ஆருகும் வரையேறி ஆறுங்கண்டால்
அவனல்லோ ஞானியென்ற நாமந்தானே. (181)

தானென்ற யோகமல்லோ ஞானபீடம்
சச்சிதா னந்தவரைக் கப்பாலேறும்
மானென்ற பெண்மயக்கம் ஆகாதப்பா
மயக்குவாள் திரோதாயி மனந்தேரொட்டாள்
கோனென்ற சற்குருவாம் மவுனநாதன்
குறிகாட்டிச் சுழினையிலே யுரைக்கச்சொல்லி
வானென்ற மவுனத்தை வைத்தாராகில்
மாண்டாலும் சொர்க்கவரை மோட்சந்தானே. (182)

## கன்ம தன்மம்.

தானான மோட்சமென்றுஞ் சொர்க்கமென்றுஞ்
சரிகையொடு கிரியைக்குச் சொன்னீசன்
தேனான யோகிக்கு ஒன்றுமில்லை
சிவபோதம் சிவயோகஞ் சேர்வாரையா
கோனான விந்துவங்கே செனிக்கும்போது
குருநாதஞ் சேர்ந்தங்கே மூடிக்கொள்ளும்
வானான நினைவோடு கன்மந்தன்மம்
வாழுஞ்சிறு குளவியாய்ப் பிறக்கும்பாரே. (183)

## மூடர்கள் அமாவாசை.

பிறக்குமது வன்றியே யெழுதோற்றத்துள்ளும்
பேராக நாலுவகை யோனிக்குள்ளும்
பிறக்குமது பொறிஐந்தால் கோடாகோடி
பிணமாகிப் பிறக்கமட்டும் மாய்கையாலே
திறக்குமிது மேல்வாசல் சங்குமூச்சு
செல்லயிலே விந்துள்ளாய் ஆத்துமாச்செல்லும்
மறக்குமிது வரைகளிலே செனிப்பதில்லை
மனஞ்சென்ற யிடங்களிலே பிறப்புண்டாமே. (184)

உண்டான மாதாவும் பிதாவுமாண்டால்
உத்தமனே தற்பனங்கள் செய்வோமென்பார்
பன்றுன கிரிகையொடு சரியைக்கெல்லாம்
பரிசுகெட்ட நினைவாலே ீரிறைத்துத்தானும்
கொண்டாடித் தற்பனங்கள் செய்வோமென்பார்
குரும்பரப்பா யெள்ளோடு தண்ணீர்வார்ப்பார்
தெண்டனிடு வார்கோயில் தோறுஞ்சென்று
தெளிவற்றே தெளியார்கள் அலைவார்தானே. (185)

அலைவார்கள் அவரவர்கள் தேசவாழ்க்கை
அமாவாசை விரதமென்பார் திதிகள்செய்வார்
உலைவார்கள் வேதியற்கு அன்னமீய்ந்து
உருதியாய்ப் பிண்டமிட்டு பிதிர்க்குப்பூசை
மலையாமற் கொடுப்பார்கள் யெள்ளுந்தண்ணீர்
வார்ப்பார்கள் வேதமுறை வளப்பமாக
நிலையான விந்துகெட்டுப் பிணமாய்ப்போனல்
நீயார்க்குத் தற்பனங்கள் செய்யும்வாரே. (186)

வாரான பிதுர்கன்மம் யோகிதீர்ப்பான்
மற்றவர்க்கு வாராது லுத்தமாண்பர்
நீரான பிணத்துக்குப் பிண்டமேது
நீதிகெட்ட யெள்ளுநீர் வார்ப்பதேது
தூரான வேதநூல் பார்த்துவாசி
சுழன்றலைவார் உலகமெல்லாம் சுத்தமாடு
தேராத பசுக்களப்பா மாய்கைக்குள்ளே
சிக்கிறை் பிறப்பிறப்பிற் சிக்கினுரே. (187)

## அமாவாசை.

சிக்காமல் சொல்லுகிறேன் புலத்தியனேகேளு
    தேசத்தோ டொத்துணியாய் வாழாதப்பா
சொக்காதே யிருந்தல்லோ சாக்கிரத்திற்
    சுருதியந்த ஆக்கினேயி லகாரந்தொட்டு
மக்காத கீழ்படியில் மகாரந்தொட்டு
    வாசமா மிடகலேயில் வகாரந்தொட்டு
புக்காதே பின்கலேயிற் சிகாரந்தொட்டு
    பூட்டப்பா ரிதுவல்லோ அமாவாசையெண்ணே. (188)

அமாவாசை பூரணேயிற் பிதிர்மாதாகன்மம்
    ஆகாகா விந்துநா தத்துட்பாரு
கமலசி விந்துவிலே நாட்டமூனு
    நாலான பூரணத்தை மேலேதாக்கு
சமராகி விந்துவொடு நாதம்ரெண்டுஞ்
    சமரசமாம் அமாவாசைக் குள்ளேதாக்கி
யிமையோடு விழியூட்டு சோமசூர்யன்
    யிகபரமாய் ஒளிவீசும் திதியிதாச்சே. (189)

திதிசடக்குக் கமாவாசைக் குள்ளேசென்று
    திருப்தியா மிப்படியே சிவயோகமப்பா
கெதிமோட்ச மிதுவல்லோ சற்புத்திரராதி
    கெடியாக அமாவாசை யறிந்தோர்க்கையா
பிதிர்சூட்சம் மாதாவின் சூட்சஞ்சொன்னேன்
    பிதற்றாதே யெழுகோடி பிதிர்க்குமுத்தி
மதிகெட்ட மாணுக்கள் தோற்றமேழில்
    வங்கிசமு முத்திபெறு மாதாந்தத்தே. (190)

## புத்தி

மாதாந்த ரெத்தமல்லோ சடலமாச்சு
    வளமான தக்தையல்லோ சடலமாச்சு
நாதாந்த விந்துரெண்டுஞ் சமரசத்தில்
    நாடிப்பார் விந்துநாதம் நம்முள்ளாச்சு
வேதாந்தம் செல்லாது மவுனவாழ்க்கை
    வெளியொளியாய்ப் பிரணவத்தில் மேவுங்காலம்
போதாந்த மேலாச்சு யெமனும்போச்சு
    பூரணத்தில் நிலேநிற்பார் புத்திகாணே. (191)

புத்தியென்று லிதுபுத்தி சற்புத்திரர்க்கு
புத்திகெட்ட மாடானுற் கிரியைதள்ளு
சத்தியென்றால் விதுசத்தி குண்டலித்திரம்முள்
சாடினர் சற்குருவின் உபதேசத்தால்
முத்தியென்று லிதுமுத்தி மவுனமூலம்
முனைவிந்து செனிக்குமப்போ அமர்ந்தவர்ழ்க்கை
மத்தியிலே வாராது வாராதப்பா
மனங்கொண்டு பார்த்தாலும் வாராதாமே. (192)

வாராதோ விட்டகுறை சுவாசத்தாலே
மாதாவும் பிதுர்கூடி யமைந்தவிந்து
சாராது விந்துநில்லு பற்றவேதான்
தவறாது நாதாந்தத் துள்ளேயேறும்
தீராதோ பிறவியெல்லாம் மவுனந்தாக்கி
சித்தாந்தி யாங்காலந் தீர்க்கமாட்டான்
பேராதோ மனமாய்கை அறிவிலேறிப்
பெலத்ததுவே வருடமொன்றில் மவுனத்தாயே. (193)

தாயான சிற்பரையைப் பூசைசெய்தால்
தவறொன்றும் வாராது சார்ந்துயேறும்
வாயாரத் தோத்திரங்கள் பேசியென்ன
மவுனகுரு உபதேசம் வைத்தாலென்ன
பேயாகப் பிதற்றியே திரிந்தாலென்ன
பெலமான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
மாயாதி வித்தையென்ன மவுனமென்ன
மனக்குரங்கு கொம்பிலெஞ்சி யேறிநோக்கே. (194)

ஏறினால் வாசியின்மே லேறவேணும்
யிருந்துரைக்க மேல்வாசல் திறக்கவேணும்
மாறினால் மாய்கைவிட்டுப் பாயவேணும்
மவுனமென்ற குருவந்து வாய்க்கவேணும்
தேறினால் மனமல்லோ தேறவேணும்
செடமானல் தீர்க்கமா யிருக்கவேணும்
ஆறினால் சன்முகத்தைக் காணவேணும்
அவரல்லோ மவுனநந்தி யாட்டம்பாரே. (195)

ஆட்டினல் பூரணத்தை யாட்டவேணும்
அதினலே யம்பலத்திற் செல்லவேணும்
மூட்டின விடையின்ஞய் மூட்டவேணும்
முதிர்ந்தநின்ற பேரின்ப முத்திவேணும்
நாட்டினல் விந்துவிலே நாட்டவேணும்
நன்மைபெறச் சுழினையிலே நிர்கவேணும்
காட்டினல் குருநாதன் பூசைவேணும்
கண்டித்தே ஒளிகாணக் கருதிப்பாரே. (196)

## நூலில் சொன்ன விபரம்.

கருவான அட்டகர்ம மாறல்சொன்னேன்
கைமுறையாஞ் சிதம்பரத்தின் பூசைசொன்னேன்
உருவாக மூலமந் திரங்கள்சொன்னேன்
ஒளிகாண நிராகாரச் சூட்சஞ்சொன்னேன்
திருவாக நாற்பத்து முக்கோணபூசை
சித்திபெற வகைசொன்னேன் தெளிந்துபாரு
மருவாத பெண்கள்மையல் தள்ளச்சொன்னேன்
வாசமாய்ச் சுழினையிற்கண் பத்தென்றேனே. (197)

பத்தவே மனமொன்ருய்ப் பூட்டுதாக்கு
பவந்தீர சாபத்தி னிவர்த்திசொன்னேன்
சுத்தமாய் சிவயோக அனுட்டானத்தைச்
சொல்முறைகள் தப்பாமல் செய்யச்சொன்னேன்
சித்தமே யாதியிலே சேர்க்கச்சொன்னேன்
சித்தாதி யாகவென்று உண்மைசொன்னேன்
செத்தபிண மானுக்கா லேதுமில்லை
தேசத்து மாய்கையிலே சென்றிடாதே. (198)

சென்றிடவே அட்டபெலி பாலரோடு
திறமான அட்டசத்தி கிரிநாகங்கள்
நன்றிபெறக் கைமுறையாய்ப் பூசைசொன்னேன்
நலமான குகைவாசல் கார்க்கச்சொன்னேன்
முற்றிபெறச் சுழினைவழி மார்க்கஞ்சொன்னேன்
முத்திரை நியாசமொடு மவுனஞ்சொன்னேன்
வெற்றியுடன் சித்தரூட பூசைசொன்னேன்
விளங்கவே காயாச மீய்ந்ததுவுமெய்யே. (199)

மெய்யான காயாசம் வாங்கச்சொன்னேன்
வீராவ ரசபற்பங் கொள்ளச்சொன்னேன்
கையான சீடருக்குப் புத்திசொன்னேன்
கள்ளரென்ற சீடரைநான் தள்ளச்சொன்னேன்
பொய்யான பொய்சொன்ன புழுச்சண்டாளர்
பொருளீய்ந்து பிறர்க்குரைப்பார் பாலச்சீடர்
அய்யவென் றுரைத்தாலுந் தள்ளச்சொன்னேன்
அக்கினியா மிவர்களுடன் பேசொண்ணுதே. (200)

ஒண்ணுன மனதுரிமை சீடருக்கு
உரைசொல்லிப் பூசைவிதி மார்க்கஞ்சொல்லி
விண்ணுட்டம் கண்ணுடி மேவச்சொல்லி
மேலான மவுனத்தைப் பற்றச்சொல்லி
சுண்ணம்பும் மஞ்சளும்போல் குறியுங்காட்டி
சுழிமுனையிலே நாட்டமுறத் தொட்டுக்காட்டி
கண்ணுடிக் குள்ளுருவின் பதத்தைப்போற்றிக்
கருணைபெறப் பூசைவிதிக் கருவாம்முற்றே. (201)

## அகத்தியர் பூஜாவிதி 200

## முற்றிற்று.

மதுரை தெற்குவாசல் சின்னக்கடைவீதி மல்லி சு. வைத்திய
நாதன் அவர்கள் கொடுத்த பிரதியின்படி அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

## அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞான சைதன்யம் 51.

### காப்பு.

ஆதியாய் நின்றவிளக் கொளிவைப்போற்றி
அரனருளை யுறுமடியார் பாதம்போற்றி
நீதியாய்ப் பதினெண்பேர் கிருபையாலே
நிறைந்துரைத்த யோகமுடன் ஞானந்தன்னை
பாதிமதி யணிபரமன் எனக்கிசைந்த
பருதிமதி சுழிமூன்றும் நன்றாய்ச்சொல்வேன்
வேதனைவா ராமல்முதற் றீட்சைமார்க்கம்
விளம்புவேன் மகாரகண பதிகாப்பாமே. (1)

ஆமெனவே யிடகலை யகாரஞ்சந்திரன்
அருளாம் உகாரபிங் கலையாஞ்சூரியன்
தாமெனவே ஓங்காரக் கம்ப நுனியுச்சி
சாதித்தார் சுழிமுனையில் மகாரம்நிற்கும்
நாமெனவே நாதவிந்தால் சுழினைபாரு
நன்றாமி ரவிமதியு மொன்றாய்க்கூடும்
பாமெனவே அமுர்தங் கபாலத்தேறும்
பருதிநிகர் செந்தீயொளி வீசுந்தானே. (2)

தானென்ற அகாரமதே விந்துவாகும்
சாதனை யுகாரமதே நாதமாகும்
வானென்ற சுழினையதே மகாரமாகும்
மைந்தனே யிதைமறைத்தார் சித்தரெல்லாம்
தேனென்ற குருகாட்டத் தெரியுமல்லால்
சிவமறியாப் பாவிகட்குத் தெரியாதப்பா
நானென்ற சிவயோக மார்க்கந்தன்னை
நன்மையுள பிள்ளைகட்குச் சொன்னேன்பாரே. (3)

சொன்னபடி யின்னமொரு சேதிசொல்வேன்
சோதிதனி லேகினமுந் துடர்ந்துயேறு
என்னபடித் தாலுங்குரு வில்லாச்சீடன்
என்னபிர யோசனமா மலைந்துசாவான்
பொன்னதனைக் கம்மாளர் உருக்கினற்போல்
புருவநடுத் தமர்திறக்க விருகண்பூட்டு
கொன்றுவிடுங் கருவியெல்லாஞ் சணத்தில்மாளும்
கூத்தன்நின்ற சுழினைதனைத் திறமாய்க்காணே. (4)

காணப்பா யிடைமணியே நாதமாகும்
கருவான பின்மணியே விந்துவாகும்
தோணப்பா அம்மணிகள் ரெண்டுக்குந்தான்
துருவயிடை பிங்கலையு மென்றுபோராம்
ஊணப்பா சந்திரசூ ரியனுமென்பார்
உறையான நீரென்றுங் கங்கையென்றும்
பூணப்பா ரவியென்றும் மதிதானென்றும்
பூட்டுவார் சுடர்ச்சோதி யெனச்சொல்வாரே. (5)

வாரான பெரியோர்கள் பாசையெல்லாம்
மகாரமதுக் கேயாகும் மனம்வேறில்லை
கூரான யிருவிழியால் அடிமூலம்பார்
குறிதோணும் வெளிதோணும் தோசந்தீரும்
பேரான அட்டசித்தி வசமேயாகும்
பிரியமுறும் மருந்தெல்லாஞ் சித்தியாகும்
ஏராத வாசியது யேறிற்ருனல்
எமனில்லை வினையிருளு மில்லையெண்ணே. (6)

இருளில்லை யென்பதுதா னுருக்கென்றால்
இடையென்ற கலையிற்கண் ணிருக்கினேற்கு
வறுமையில்லை யென்னுஞ்சொல் லாருக்கென்றால்
மகத்தான பஞ்சவர்னங் கண்டோர்க்கப்பா
கெருவமில்லை யென்றசொல் லாருக்கென்றால்
கேசரத்தில் நாசிநுனி பார்த்தோர்க்கப்பா
தருமம்வரு மென்றசொல் லாருக்கென்றால்
சதாபத்தி விளக்கொளிவிற் சார்ந்தோர்க்காமே. (7)

ஆமப்பா முத்துபச்சை பவழம்வெள்ளை
ஆதியென்ற மஞ்சள்அஞ்சும் பஞ்சகர்த்தாள்
நாமமிடை பிங்கலையும் பிரமன்விஷ்ணு
நாடிமூன்றுங் கூடிநின்ற சுழியேருத்திரன்
வாமப்பா புருவமத்தி மயேசனுகும்
வன்மைசிவ னுக்குமனோன் மணியேசத்தி
ஊமப்பா பிரமனுக்குச் சத்திவாணி
உறுதியுள்ள விஷ்ணுவுக்குத் திருவாங்காணே. (8)

காணவே ருத்திரற்கு ருத்திரியாகும்
கார்மகேஸ் வரற்குமகேஸ் வரியுமாகும்
வேணென்ற யிவர்சுழினே உச்சிமையம்
வீற்றிருப்பார் மூலகண பதிவாலையும்
பாணென்ற நடுவில்நின்று பார்த்தாயானல்
பாலகனே சிவசத்தி வார்த்தைசொல்வார்
ஊணென்ற தேகங்கை லாசமாகும்
உற்றகுரு வார்த்தைதனை யுரைத்திட்டேனே (9)

சாதனை விபரம்.

உரைத்தபடி நின்றுமிகப் பழக்கமாகி
உறுதிகொண்டு மயிர்ப்பால மீதிலேறி
நிறைத்தபடி முடியும்நெருப் பாறுதாண்டு
நேரான பூரணமுங் கலந்துபேசும்
மறைத்தாரே சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
மகத்தான பூரணத்தைக் காட்டாமற்ருன்
விரைத்த விரைசாவி யாகாமற்ருன்
விபரமுடன் பூரணத்தை விளம்புவேனே. (10)

பூரண விபரம்.

விளம்புகிறேன் பூரணத்தா னெதுவென்ருக்கால்
வெட்டாவெளி சுழினையுச்சி வேறேயில்லை
தளம்பாதே வேறென்றெண் ணுதேநீயும்
சகலசித்துங் கைவசமா யாடும்பீடம்
முளங்காதே பூரணத்தைக் கண்டோமென்று
முச்சுடரின் சேதிதனை மொழிந்தாற்ருேசம்
பழங்காறு மும்மூலந் தன்னைத்தானும்
பார்மகனே சித்தர்கள்தான் பகரார்காணே. (11)

காணென்று சொல்வதுதான் யாருக்கென்றால்
காலறிந்த ஞானிகட்குச் சொல்லலாகும்
வாணென்ற சொல்லதனை யறியவேணும்
வஞ்சசண் டாளர்நட்பைத் தள்ளவேணும்
ஊணென்று சொன்னவிடங் காணவேணும்
உன்மனதைப் பூரணத்தி லேற்றவேணும்
சாணென்ற சொல்லகற்ற விதனைச்சொன்னேன்
சமர்த்திருந்தால் மும்மூலந் தயவாய்ப்பாரே. (12)

தயவாகச் சொல்லிவிட்டேன் சுழினைமார்க்கம்
சாதனையைப் புலையரிடம் சொன்னாற்றோசம்
மயமான சோதியடி மூலம்பாரு
மகாரமென்ற சுழினைதனைப் பின்புபாரு
நயமான கருவிதொண் ணூற் றாறும்போகும்
நற்றீப வொளிவீசும் புருவந்தன்னில்
பயமில்லை யாண்டுபன்னி ரெண்டுஞ்சென்றால்
பராபர முனக்கேவல் செய்வார்பாரே. (13)

பாருமென்று வேணதெல்லாஞ் சொல்வார்பின்னும்
பாரிலதி சயங்கள்தனைத் தெரியச்சொல்வார்
நேருமென்ற மாய்கையொடு கோபந்தள்ளு
நிலையாங்கா ரப்பைசா சத்தைத்தள்ளு
மேருவென்ற நிட்டைசதா காலம்நில்லு
மேன்மைதருந் தாயாரைக் கண்டுகொள்ளு
தேரினின்ற யண்டத்தின் சோதிதன்னை
தெளிவாக யான்பார்த்தேன் சேதிகேளே. (14)

சேதியென்ன அனல்கோடி ரவியோகோடி
சென்றேறுந் தீக்கோடி மின்னல்கோடி
வேதனையாம் நீபார்க்கும் போது அய்யா
விண்ணடா யிடிகோடி வெளிச்சங்கோடி
பேதிக்குந் தேகமது அருணன்போலாம்
பிசகில்லை புனல்கோடி சுடரோகோடி
ஏதிடுக்க மொன்றுமில்லை யிதுவுரைக்கும்
இகத்தினிலே யிருக்காதே மலையிலேறே. (15)

மலையேறி திருந்தாக்கா லொன்றுமில்லை
வாராது வாராது அப்பியாசங்கள்
கலையேறப் பாவிகட்கு யோகமேது
காலுதலை யறியார்கள் நடப்பதெங்கே
குலையறியாத் தோசிகட்குக் குளிகையெங்கே
கூட்டமிட் டிருந்தவர்க்குக் குறிகளில்லை
தலையறியா மாந்தருக்குத் தவங்களில்லை
சாதிகுல மென்றவர்க்குச் சாவுதானே. (16)

சாவதுதா னெதினாலே வந்ததென்றால்
சண்டாள மனம்நிலைக்காத் தோசத்தாலே
ஆவதுவு மழிவதுவும் விந்தாலப்பா
ஆச்சரியம் பாழ்குழியி னாசையாலே
காவலது கட்டழிந்து போனதாலே
காட்சியெல்லாம் பொய்யாச்சு கண்டுபாரு
பாவதுவுஞ் சுண்ணும்பி லொட்டினைப்போல்
பரமகுரு பீடமதைப் பகுத்திடாயே. (17)

பகுத்திடாய் யென்றுசொன்னேன் மகனேகேளு
பாரதனிற் றிருமூர்த்தி தேடிக்காணார்
வகுத்திடி ரென்றுவெகு வாகநீயும்
வாழ்த்தினையே மும்மூர்த்தி யறிந்தாராசொல்
அகத்தினிலே பிரமமதை யறியார் யாரும்
அறிந்தமட்டுஞ் சொல்லுகிறே னடுத்துக்கேளு
செகத்தினிலே யவர்பீடம் யானுங்காணேன்
சார்ந்துபார் நடுநிலையைச் சார்ந்துபாரே. (18)

சார்ந்துபா ரென்றபொரு ளறிந்துகொண்டேன்
சச்சிதா னந்தசிவ யோகமூர்த்தி
கூர்ந்துநின்ற மும்மூல மறிந்தேனையா
குருவிருந்த பீடமதை நன்றாய்க்கண்டேன்
வார்ந்துநின்ற யிருமணியின் வகையைக்கண்டேன்
வளமான சந்திரசூ ரியனைக்கண்டேன்
சார்ந்துநின்ற முச்சுடரும் கண்டேனையா
சதாசிவமாம் சுழினைதனிற் சார்ந்திட்டேனே. (19)

சார்ந்திட்டே னிடகலைபிங் கலையும்பார்த்துச்
சகலமுந்தா னனுக்கிரகத் தாலறிந்தேன்
கூர்ந்திட்டே னடிமூலந் தன்னில்நின்று
கூப்பிட்டேன் தாய்வந்து தீபமீய்ந்தாள்
பார்த்திட்டே னதற்குமேல் நடுமூலத்தைப்
பாரென்று தாய்சொன்ன ளிடச்சுழியைக்
கார்த்திட்டேன் கர்மானு பவத்தைவெட்டிக்
காரணமாம் புருவமென்ற தீபந்தானே. (20)

தீபத்தில் நின்றுகொண்டே னனேககாலம்
சிவசிவா நினைத்ததெல்லாஞ் சித்தியாச்சு
கோபத்தை யெள்ளளவு மனதில்லையேன்
கூவென்று அழுதிட்டேன் தாயைப்பார்த்து
ஆபத்து என்னவந்து தென்றுசொல்லி
ஆத்தாளு மென்முகத்தைப் பார்த்துநின்று
ஏபத்தா அமுர்தமதை யிந்தாவென்று
எனக்குமவ ளீய்ந்திட்டாள் பார்த்திட்டேனே. (21)

பார்த்திட்டேன் மதியமுதந் தன்னைத்தின்று
பாரென்றாள் மேல்மூலம் பார்க்கும்போது
வேர்த்திட்டேன் முகங்களெல்லாம் களையுமாகி
விழுந்தேனுன் போதைதனிற் சிக்கிக்கொண்டு
ஆப்பிட்டே னவள்போதந் தன்னிற்சிக்கி
அலறினேன் வுளறினே னாத்தாள் தன்னைக்
கூப்பிட்டேன் போதைதனைச் சகிக்கமாட்டேன்
புதுமையிது போதுமென்றே அழுதிட்டேனே. (22)

அழுதவெனைப் பார்த்தசிவ காமிஆயி
அம்பரமா மிடகலையி லழுத்துயென்றாள்
பழுதப்போ கலைமாறிப் போதைபோச்சு
பார்மகனே யின்னுமென்ன கவலையென்றால்
குளிர்ந்திடவே செல்வம்போல் வந்துநின்று
கூப்பிட்டா ளேனென்றேன் திரும்பிப்பார்த்து
களரற்ற பால்போல என்னைத்தானும்
கண்மணியென் றேசொல்லி முத்திட்டாளே. (23)

முத்திட்டாள் முகத்தோடே முகமணைத்து
　　மோசமில்லை நீநானும் ஒன்றேயென்றாள்
பெத்திட்டே னவள்நானாய் நானவளாய்ப்
　　பேதமில்லை யிருபேரு மொன்றேயானோம்
சத்தியமாய்க் குருமொழியைத் தவிராதாலே
　　தாய்நானு மொன்றானோம் தப்போயில்லை
நித்தியமா யடிநின்று முடியிலேறு
　　நிர்ணயமாய்ச் சொல்லிவிட்டேன் நிசமாய்த்தானே. (24)

நிசமான தியானத்தி லிருக்கும்போது
　　நெடுஉயர மலையிலிட்ட தீபம்போலாம்
அசமான மலையிலிட்ட விளக்கைக்கண்டால்
　　ஆச்சரிய மாச்சரிய மதுவேபோதும்
பிசகான சடம்நிலைத்துப் போச்சுதப்பா
　　பிசகில்லை விளக்கதனைக் கண்டபோது
வசமாச்சு துரியநடு நிலைத்துப்போச்சு
　　வம்பான யேமனையும் வெல்லலாச்சே. (25)

வெல்லலாம் ஓம்நமசி வாயந்தன்னை
　　விளக்கமாய்ப் பஞ்சகர்த்த ரெழுத்தைச்சொல்வேன்
சல்லலா மிதனாலே அட்டகன்மம்
　　க்ஷணத்தில்வினை யாடிடலா மென்றுஞ்சொன்னார்
அல்லவடா சித்தர்களைக் காணவென்றால்
　　அறையுகிறேன் சிவயநம கிலிவோமென்று
சொல்லியே ஜெபித்திடவே சித்தர்வந்து
　　சூட்சமுடன் தொழில்முறைகள் தருவார்நில்லே. (26)

நில்லென்று சொல்வதுதா னெங்கேயென்றால்
　　னேமமதாய்ப் பொதிகையென்ற பருவந்தன்னில்
கல்லென்று சொன்னவிடங் காணவேணும்
　　கருத்தறிந்த பிள்ளைகளைச் சேர்க்கவேணும்
இல்லறமும் பொருளேவ லிருந்துதானுள்
　　யென்னசொல்வேன் தவநெறிக்கு ஆகாதப்பா
வள்ளதொரு பிள்ளைகளா யில்லாவிட்டால்
　　வணக்கமூறுந் துறலரமா யிருத்தல்நன்றே. (27)

நன்றென்ற நூலுண்மை யறிந்தோ ஞனல்
நன்மையாஞ் சித்தர்வந்து கூட்டிக்கொள்வார்
ஒன்றென்ற பொருள்தெரிந்தால் நாமும்சொல்வோம்
உறுதியுள்ள சித்தனென்று சேர்த்துக்கொள்வேன்
பண்டென்ற கற்பமுறை யெல்லாஞ்சொல்வேன்
பரமகுரு வேடமதைப் பூணவைப்பேன்
கண்டென்ற வள்ளபங்க ளிருந்தாலப்பா
காசினியி லிருந்துதவஞ் செய்துவாவே. (28)

வாவென்றேன் தவத்தைநிறை வேற்றிக்கொள்ளு
வராவிட்டார் பொதிகைதனிற் சேருசேரு
கூவென்றேன் முன்னேசித் தரையுங்காண
குறிப்பறிந்து தியானமதைச் சொல்லுகின்றேன்
ஆவென்ற ஐந்தெழுத்தை லக்ஷமோத
அரியரனும் வந்துனக்கு உபதேசிப்பார்
மாவென்ற கூட்டமதிற் சேர்த்துக்கொள்வார்
மகாசித்த ராவதற்கு வளஞ்சொன்னேனே. (29)

சொன்னேனே இப்படித்தான் வெளியதாக
சொல்லியுந்தா னறியாட்ட லென்னசெய்வோம்
பொன்னான முருகவேள் கிருபையாலே
பூட்டெல்லாம் வெளிதிறந்து போட்டேனப்பா
நன்னயமாய் இந்நூலை யாருக்குந்தான்
நல்காதே சுழிமுனையுட குறியைப்பாரு
என்னமோ வென்றுசொல்லி இகழ்ச்சியாக
இயம்பினு லெமனுன்னை யிழுப்பான்பாரே. (30)

இழுக்குடைய மூடர்களோ டிணங்கிடாது
இயல்புமிகுஞ் சுழிமுனையைக் கண்டுதேறு
பழக்கமில்லாத் தோசிகளைச் சேர்ந்திடாதே
பாழ்குழியி லேதினமும் வீழ்ந்திடாதே
முழக்கமுள்ள மாயைவந் ததட்டிற்ருனல்
முன்னின்ற ஞானமென்ற வாளால்வெட்டு
வளப்பமுடன் அதனைநீ வெட்டாவிட்டால்
மயக்கமுற்ற பாம்புவந்து சீறுந்தானே. (31)

சீறினல் சீறுமென் றிருக்தாயானல்
சிவன்பாதங் காணுமுன்னே தேகம்போகும்
மாறினல் வாசியிரு சுடறிலேற்றி
வைத்தாக்கா லிந்திரியப் பாம்புசாகும்
கூறினற் போகாது எருேட்டாது
கூசாமலேமௌனத் தடியாற்கொள்ளு
தேறுதற்கு ஞானமென்ற வலையைப்போட்டால்
சீறுகின்ற பாம்பதுவு மடங்கிப்போமே. (32)

அடங்காது வலையைநீ போடாவிட்டால்
ஐயையோ வீண்பாடு பட்டதெல்லாம்
துடங்காது மாயையினல் ஞானசோதி
சொரூபமணி கண்டதுவும் பொய்யாய்ப்போகும்
பலவான தொழில்களெல்லாம் பொய்யென்றெண்ணிப்
பார்த்தோர்க்குக் கருவதனைப் பகரக்கேளு
கலையான மௌனத்தார் மாயைதன்னைக்
கரணமென்ற இருகண்ணுற் கட்டிக்காட்டே. (33)

காட்டியே யிருகண்ணுற் காலைக்கட்டு
காரணத்தை முக்காலா லேற்றிக்கொள்ளு
சூட்டுவது சுழினையிரு பூவைச்சூட்டு
சுகபோகமென் றுசிவன் னன்ருய்ச்சொன்னர்
நீட்டுவது நான்பார்த்தேன் நீயும்பாரு
நிசஞ்சொன்ன ரென்பேரிற் சந்தோஷத்தால்
பூட்டுவது என்குருயிப் படியேயென்ருர்
புதுமைதனை யின்னமென் றுரைத்திட்டாரே. (34)

உரைத்தபடி பார்த்துநீ வருகும்போது
ஓகோகோ நடனவொலிச் சத்தங்கேட்கும்
மறைத்திட்ட நடுமூலங் கண்டத்தூணி
வாசிதனை ஆகாச வட்டஞ்சேரு
குறையில்லை மத்தளத்தி ஞேசைகாணும்
குற்றமில்லாத் தீபவொளி வீசும்வீசும்
திரையகற்றி நந்திவொளி வீசுங்கண்கள்
திருவான வாசிகண்ட மேருந்தானே. (35)

கண்டமெனும் புருவநுனி மூக்கிலேறும்
　　கருத்துவைத்து வாசிதனைக் கபாலத்தேற்று
விண்டுநின்ற அடிமூலம் பார்க்கும்போது
　　வெடிச்சத்தங் கேட்குமன மொடுங்குமட்டும்
பண்டுசொன்ன அடிப்படையில் திறமாய்நின்று
　　பரிவேகம் ஒடுங்கினுற் சத்தம்போச்சு
தண்டுமுண்டு பண்ணுமல் நிமைமூடாமல்
　　சாதித்தாற் சோதியுமா மிருளுமாமே. (36)

இருளதுவுஞ் சோதியிலே மூடிற்ருனல்
　　ஏதுயிரு கொள்ளியினுற் சுட்டுப்போடு
மருளில்லை யேகமதாய் வெளிச்சமாச்சு
　　மனமடங்க வாசியது அடங்கும்பாரு
பெருமையென்ற மோனபத மறிவிற்காண
　　பீடுயரும் வெளியொளியாம் வீட்டைப்பற்றி
அருமையென்ற வாசிசுழி யேறுமட்டும்
　　அடையிடையி லங்கென்று அழுத்திநில்லே. (37)

நில்லடா காற்றேறி நின்றுதானுல்
　　நீபாரு சுழியதனை யிடைக்கண்ணுலே
எல்லிபக லற்றநடு மூலமாகும்
　　இங்கிருந்து மேலேற ஆயிசொல்வாள்
வல்லமையாய் மனதையொட்டிச் சமாதிபாரு
　　வளுவான திரோதாயி மயக்கந்தீரும்
நல்லதொரு மாணவனே யுந்தனுக்காய்
　　நலமாகச் சொல்லிவிட்டே னூன்றிப்பாரே. (38)

ஊணிப்பார்க் கையிற்கண்ணில் வலியுண்டானுல்
　　உருட்டிநீ கசக்கிவிட்டு தேய்த்துக்கொள்ளு
பாணியென்ற கண்ணின்வலி போச்சுபோச்சு
　　பரஞான தீபவொளி காணலாச்சு
மாணிக்கக் கங்கைதனைக் குடிக்கலாச்சு
　　வளமான வாசியது யேறலாச்சு
காணிக்கு மூன்றுசுடர் காணலாச்சு
　　கருணைதருஞ் சத்திசிவங் காட்டுவேனே. (39)

காட்டுகிறேன் சத்திசிவம் ஒளியேயாகும்
கருணைதரும் நாதவிந்து ஒளியேயாகும்
மாட்டுகிறேன் பூரணமு மமுதம்ரெண்டும்
மயமான ரவிமதியு மொளியேயாகும்
பூட்டுகிறேன் சந்திர சூரியனுமாகும்
புலம்பாதே சுழினையேகாச் சரமுந்தோணும்
ஆடுகிறேன் சடாச்சரபஞ் சாட்சரந்தான்
அடங்காத யெட்டெழுத்தும் ஒளியுமாமே. (40)

ஒளியாச்சு உகாரமுடன் அகாரம்ரெண்டும்
ஓகோகோ அண்டபிண்ட முரைக்கலாச்சு
கலையாச்சு பன்னிரண்டும் பதினாறுச்சு
காலாச்சு ஐம்பூதக் கருவுமாச்சு
தெளிவாச்சு மதியாச்சு வாசியாச்சு
சிறப்பான வங்சிங்மங் மருவலாச்சு
வெளியாச்சு சிறிதாச்சு புனலுமாச்சு
மேலான பஞ்சவர்ண ஒளியுமாச்சே. (41)

ஆச்சடா யித்தனைபேர் ஒளிக்கேயாகும்
அப்பனே வேறேது மில்லையில்லை
போச்சடா பெண்ணாசை தன்னலப்பா
புருவமைய ஒளிமமுங்கிப் போச்சுபோச்சு
வாச்சுதடா உனக்குயித் தனையுமப்பா
வளமாகச் சொல்லிவிட்டேன் மயங்கவேண்டாம்
கூச்சடா படுக்கவென்று லுபாயங்கேளு
குருவான விடக்கையைக் கீழேவையே. (42)

வையடா கால்நீட்டிப் படுக்கும்போது
மைந்தனே புருவமதிற் றியானம்வைநீ
செய்யடா உதயத்திற் சீரசுத்தி
சிவசிவா திருநீறு தளமாய்ப்பூசி
உய்யடா உதயாதி மூன்றுக்குள்ளே
உற்றவிஷந் தனையெடுத்துக் கதிரிற்கொள்ளு
நையடா மும்முக்கால் கடந்தபின்பு
நலமான பத்தியங்கொள் நாட்டம்பாரே. (43)

நாட்டம்பார் சூரியனி லவிழ்தங்கொள்ளு
கலமான அமுதுண்ணு உறக்கம்பண்ணு
ஆட்டம்பார் சூடுகொண்டால் நெய்யைத்தேய்த்து
அதன்பிறகு பயர்தேய்த்துக் குளித்துப்போடு
ஊட்டம்பார் அமுதுடனே பாலுங்கொள்ளு
ஒருவாரம் ஓர்முழுக்கு பஞ்சகற்பம்
சீட்டமுட னிப்படியே செய்துவந்தாற்
சிவராஜ யோகமிது தீர்க்கந்தானே. (44)

தானென்ற யோகியென்றாற் றாயைக்காண்பான்
சண்டாள வாதியென்றாற் சுட்டுமாய்வான்
பானென்ற அமுர்தமுண்டாற் றேகம்பொன்னும்
பரைவாலை தனையறிந்தாற் சித்தனாவான்
ஊனென்ற வரைபார்த்தால் ஞானியாவான்
ஓலியான வீண்பேச்சி லொன்றுமில்லை
கோனென்றாற் குறியறிவான் சுழினைகாண்பான்
கொடும்பாவி இவ்வழிக்கு வாரான்பாரே. (45)

வாரான யோகியென்று சடைவளர்த்து
மகாஞானம் வந்தவர்போல் வேடம்பூண்டு
கூரான அட்சரங்கள் செபித்துக்கொண்டு
குருக்களென்றும் ஞானியென்றும் பேரையிட்டுப்
பேரான சாத்திரங்கள் கற்றுக்கொண்டு
பிசகாகத் தற்கமிட்டுப் பெருமைபேசிச்
சேருவான் மாதர்களை மகிழவைத்துத்
தினந்தினமும் வயிர்பிழைக்க அலைவான்பாரே. (46)

அலைவதுவு மல்லாமற் பிள்ளைகட்கு
ஆசைகொடுத் தேயவரை அழைத்துப்போவான்
நிலையில்லா ஊர்தோறுந் திரிந்தலைந்து
நேசம்போற் கூட்டமிட்டு அர்த்தஞ்சொல்லி
வலையிலகப் பட்டதொரு மீனைப்போலே
வம்பர்களை அரைச்சணத்தில் மயங்கவைப்பான்
துலையாத வாதமுறை செய்வேனென்று
துஷ்டர்களை வாயடக்கிச் சோறுண்பானே. (47)

உண்பதுவு மல்லாம லின்னுமொன்று
　　உறமான பிள்ளைகளைக் கெடுப்பானையா
யின்பமுள்ள நல்லசமு சாரிதன்னை
　　ஈடேற வொட்டாமற் செய்வான்பாவி
வம்பனடா பொய்சொல்வான் வயிற்றினாலே
　　மருட்டுவான் நரிக்கொப்பு வைத்துக்கொண்டு
தும்பவரு மவன்காற்று உன்மேற்பட்டால்
　　துட்டனு மவனைநீ துடர்ந்தேகாதே. (48)

துடராதே யிந்நூலின் வழியேசென்றால்
　　சுத்தமதி யம்பலத்தின் சொரூபங்காணும்
படராது செனனமென்ற கொடிதானப்பா
　　பராமுகமா யிருந்தாலே மரணமாவாய்
திடமாமிச் சேதியெல்லா மாயிசொல்லச்
　　செப்பினேன் சூஸ்திரமாய் ஐம்பத்தொன்றில்
மடைமறையா திந்நூல்போ லொருநூலில்லை
　　மகிழ்சித்தர் பாஷையெல்லா மறைத்திட்டாரே. (49)

மறைத்திட்ட சிவயோகம் நன்றாய்ச்சொன்னேன்
　　வழிமுறையோ டென்மகனே யறிந்துகொள்ளு
மறைத்திட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
　　மகாமௌன யோகமிதை மறைவாய்வைத்து
நிறைத்தாரே சாத்திரங்கள் தோறுமப்பா
　　நிலையில்லா அச்சரங்கள் யோகந்தன்னை
விறைத்தாரே அதனைநிச மென்றுழைத்தால்
　　வீணாக உன்தேகம் வீழ்ந்து போமே. (50)

வீழ்ந்ததுவும் போகாம லிருகண்ணைத்தான்
　　விறைந்தடியின் நடுமூக்கில் ஊன்றிப்பாரு
தாழ்ந்ததுவும் போகாமற் சுழினைவாசி
　　தானேறி நின்றதென்றால் சொல்லக்கேளு
ஆழ்ந்துபார் சுழினைதனை அகாரத்தாலே
　　அருமையுடன் குறித்துவிட்டேன் நடுமூலத்தை
வாழ்ந்திருக்க ஒரிதழைச் சுழியில்நாட்டி
　　வைத்தால்மெய்ச் சோதிமயஞ் சொன்னேன்முற்றே. (51)

ஞான சைதன்யம் 51 முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# NEW CATALOGUE OF BOOKS.

## புதிய புத்தகக் கேட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி.

( இது ஓர் வைத்திய பெரிய அகராதி. )

இதில் பச்சிலை, கடைச்சரக்கு, பஞ்ச பூதச்சரக்கு, உபரசச்சரக்கு 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும் வகாரம், செந்தூரஞ் செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பார்த்து, இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன். 280-பக்கங்கள்கொண்ட கலிக்கோபயிண்டு சுத்த பதிப்பு

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பூ சூஸ்திரம் 30. வாத சூஸ்திரம் 16. முப்புச்குரு 11 வைத்தியசூஸ்திரம் 100 ஆக 7-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அபூர்த தாரணையின் நுட்பமும் முப்பூ இன்னதென்ற விபரமும், வழலைமார்க்கமும் தெளிவாகக்கூறியுள்ளது புத்தகம் 1-க்கு விலை ரூ 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கையடக்கமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபாங்களும், பஞ்சபூதங்களின்விபரமும், பற்பம்செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், ஞானங்களும் கூறியிருக்கிறது புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

# அகஸ்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளிவராமல் பழைய ஏட்டுப்பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது ஷெயார் ஒருவருக்கும் வெளியிடாமல்தன்னனுபவத்தில் வைத்துக்கையாண்டுவந்ததை மகா-ள-ள-ஸ்ரீ இ. ராம. குருசாமிக்கோனரவர்கள் சுவாமியாரிடம் போய் வேண்டும் பொருள் கொடுத்து வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும்பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகச்சொல்லியிருக்கிறது. வெகு அருமையான சாஸ்திரம்

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம் 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம் 11-வது ஜாலகாண்டம். 12-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது,

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## அகஸ்தியர் கற்ப மூப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும் மூப்பு முடிக்கும் விபரமும் பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும் சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

இதுவரை எட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவ ரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னைத்தா னறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தி யம், வாதம், சத்துரு-மித்துருவிபரங்கள் சொல்லியுள்ளது புதிய சாஸ்திரம் கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

## அகஸ்தியர் தற்க சாஸ்திரம்

இது அக்த்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மங்களுக்குதாத் பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது. விலை அணா 0-10-0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார் களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறை களையும், தமிழ், முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்தி களையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாக தனித்தனியாகவும் பயிண்டுசெய்திருப்பதால் வேண்டியவர்கள் தனித் தனிப்பிரதியாகவும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500 ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம் 1-க்கு விலை அணா 0—12—0

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பர்வாகவும், சிந்தாகவும் இம்மாதிரி பல வர்ணமெட்டுகளாய் வேடிக்கை விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் விலை ரூபாய் 0—14—0

## விஷவைத்திய மென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிதமான விஷ ஆரூடசாஸ்திரங்களைச்சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்த விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

# காக புசுண்டர் 1000

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனல் இது வரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷியாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும் அந்த அமுரி கற்பத்தை எந்த விதத்தில் முரித்துச் சாப்பிடுகிறது என்பதும் அதை யெந்த பாத்திரத்தில் உபயோகிப்பதென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய கஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய்யும் முறையும் பத்திய முரிவு யேற்பட்டால் அதற்கு வேண்டிய பக்குவங்களும் கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும் அந்குற்றங்களேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும் கற்ப மூலிகை விபரங்களும் கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டிய முறையும் வாத முறைகளுக்குத் தைல வகைகளும் சுத்தி முறைகளும் சிதம்பரத்தில் தங்க விக்கிரகஞ் செய்த விபரமும் சொல்லியுள்ளது இது போகர் ஏழுத்தில் சேராத புதிய சாஸ்திரம் விலை அணா 0—12—0

# புலஸ்தியர் கற்பம்300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் யோக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம்1-க்குவிலை 0--10--0

## புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300.

இந்த சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குரிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கு விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்துகொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமாமலையி லெழுந்தருளி யிருக்கும் அழகமலை யாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து மண்டூக மாமுனிக்கு முத்திகொடுத்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை சென்ற முதலான சகல வைபவங்களையும் பத்து அவதாரங்களையும் வர்ணிப்புச் சந்தமாக யாவருக்கும் தெரியும்படி அலங்காரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

## பாகவத அம்மானை வர்ணிப்பு.

ஐயா நீங்கள் இதுவரையிலும் எத்தனையோ அநேக விதமான வர்ணிப்புகளை படித்திருந்தாலும் பெருமை பொருந்திய இந்தப் பாகவதஅம்மானை வர்ணிப்பை ஒருமுறை வாங்கிப் படிப்பீர்களானால் இதினலங்காரம் தங்களுக்கே நன்கு தெரியும் தற்புகழ்ச்சியன்று அவசியம் வாங்கிப் படித்து உண்மையறியுங்கள்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—6—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது. பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—4—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—4—0